Registered as a Newspaper

பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 35

ஞாயிற்றுக்கிழமை
31 டிசெம்பர் 2023

மார்கழி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054


முச்சந்தி முரளி



"இப்ப எல்லாரையும் பிடிக்கிற பொலிஸ்காரர் உந்த மணல் மாபியாவைப் பிடிக்காயினமோ?"

## வீடு புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 31
மாகியப்பிட்டியில் வீடு புகுந்து பெறுமதி வாய்ந்த கைபேசியொன்று நேற்றுக்காலை திருடிச் செல்லப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
'வீட்டார் வெளியில் சென்ற நிலையில் வீட்டின் கூரையைப் பிரித்து

15

போதை வியாபாரிகளை

# பொலிஸார் இனிமேல் சுட்டும் பிடிப்பார்கள்!

கே.கே.எஸ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 31
போதைப்பொருள் வியாபாரிகள் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்து தலை மறைவாக இருக்கின்றனர்.

15

## காரைநகரில் கொள்ளை

யாழ்ப்பாணம், டிசெ. 31
காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்

15






அரசியல் ஆசீர்வாதத்துடன்

# குடாநாட்டில் மீண்டும் மணல் 'மாபியாக்கள்'

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த காலங்களில் அரசியல் பின்புலத்துடன் மணல் வியாபாரத்தை முன்னெடுத்த தரப்புகள் மீளவும் மணல் விநியோகத்தில் தலையீடு செய்வதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. யாழ். மாவட்டச் செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகரித்த விலையில் அந்தத் தரப்புகள் மணலை விற்பனை செய்வதாகவும் கூறப்படுகின்றது.

15

## சி.ஐ.டி. என்று மிரட்டி கைவரிசை காட்டியோர் கைது

வவுனியா, டிசெ. 31
குற்றப்புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) எனக் கூறி வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் திருட்டில் ஈடுபட்ட மூவர் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15



## ஆணைக்குழுக்கள் ஏமாற்று நாடகம்

காணாமல் ஆக்கப்பட்டோரினது உறவுகள் நேற்றுப் போராட்டம்

வவுனியா, டிசெ. 31
வடக்கு மற்றும் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக்காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

15

## குடாநாட்டில் இன்னும் குறையாத டெங்கு

ஒரேநாளில் 97பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31
நேற்றுமுன்தினம் 12 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 97 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். (அ-ஒ-5-125)

ஜனாதிபதித் தேர்தல்

## தமிழ்க் கூட்டமைப்பும் சஜித்தின் கூட்டணிக்குள்?

கொழும்பு, டிசெ. 31
ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி அமையவுள்ள எதிரணி அரசியல் கூட்டணி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்களுடன் எதிர்க்கட்சி

15

## லொறி மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

பளையில் நேற்று இரவு சம்பவம்

பளை, டிசெ. 31
லொறி மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணி

15

## சிறுமி வன்புணர்வு; 3 சிறுவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 31
ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 14, 16 மற்றும்

15

சஞ்சீவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னக்கோனை தண்டிக்காதது ஏன்?

## ம.உரிமை செயற்பாட்டாளர்கள் கூட்டாகக் கேள்வி

கொழும்பு, டிசெ. 31

குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? என்று ஊடகவியலாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஓய்வுபெற்ற சிப்பாய் ஒருவரை நிர்வாணமாக்கி சித்திரவதை செய்த குற்றச்சாட்டின் கீழ் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு 50 இலட்சம் ரூபா தண்டம் விதித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பிட்டது.

அத்துடன் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்துமாறும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. தீர்ப்பு வழங்கி இரண்டு வாரங்கள் கடந்த நிலையிலும் பதில் பொலிஸ்மா அதிபர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதையடுத்தே குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? என்று ஊடகவியலாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

(ச-6)

# தமிழ் பொதுவேட்பாளர் சாத்தியமற்ற விடயமே

## சிறிதுங்க ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயம் அரசியல் களத்தில் பேசுபொருள் மாத்திரமே. அது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயமாகும். அவ்வாறான முயற்சி இடம்பெற்றாலும் இந்தியாவின் கோரிக்கையின் பிரகாரம் அதனை கடைசியில் கைவிட்டுவிடுவார்கள் என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் தொடர்பில் 'உதயனுக்கு' அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் களத்தில் நாடிபிடித்துப் பார்ப்பதற்காக அவ்வப்போது ஏதேனும் ஏற்பாடுகள் இடம்பெறும். அந்தவகையிலேயே தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயமும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம். அதைப்பற்றி பேசிப் பயன் இல்லை.

ஏனெனில் இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலானது இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான போட்டியாகவே அமையவுள்ளது.

கடைசியாக மாலைதீவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்நிலைமையே காணப்பட்டது. அந்தவகையில் மொட்டுக் கட்சித் தரப்புக்கு சீனாவும், சஜித் தரப்புக்கு இந்தியாவும் பின்புலமாக இருக்கும். தற்போது பொதுவேட்பாளர் பற்றிப் பேசுபவர்கள் இந்தியக் கோரிக்கையை ஏற்று, அந்நாடு சார்பு வேட்பாளரையே ஆதரிப்பார்கள் - என்றார்.

(ம-44)

# மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொள்கைமாறும் விக்னேஸ்வரன்

## சாணக்கியன் காட்டம்

மூன்று மாதங்களுக்கு ஒருதடவை கொள்கை மாறுபவர்தான் சி.வி.விக்னேஸ்வரன் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன். "தமிழரசுக் கட்சியினர் சி.வி. விக்னேஸ்வரனைப் போல 3 மாதத்துக்கு ஒருமுறை கொள்கை மாற்றுபவர்கள் அல்லர். தொடர்ச்சியாக ஒரே பாதையில் பயணிப்போம்" என்றும் அவர் தெரிவித்தார்.


(ம-125)

# தபால் கட்டணத்தில் விரைவில் மாற்றம்

2024ஆம் ஆண்டுமுதல் தபால் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. பல மூலப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் தபால் கட்டணங்களைத் திருத்து வதற்கும் வற்வரி அதிகரிப்புக்கும் தொடர்பில்லையென்றும் அந்தத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 10 . 1942



இறப்பு 23 . 12 . 2013

## கந்தையா பரமேஸ்வரன்

(S.L.A.S)

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடாகவும், கொழும்பு மற்றும் Cambridge, UK ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமேஸ்வரன் அவர்கள் கடந்த (23.12.2023) சனிக்கிழமை அன்று Cambridge, UK இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமலர் அவர்களின் அன்புக் கணவரும், லோஜினி, சிவரூபன், சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரவிந்தன், சிந்துஜா, குமுதா ஆகியோரின் மாமனாரும், ஆதேவிஷ், நித்தேஷ், அபிநாத், அபிசயன், அபிசரண், அகின், லித்திகா ஆகியோரின் அன்புப் பேரனும், வரபிரகாசம் (யாழ். இந்துக்கல்லூரி - ஓய்வுநிலை ஆசிரியர் - கனடா), காலஞ்சென்ற பரமசிவம் ராஜராஜேஸ்வரி (ஜேர்மனி), நாகேஸ்வரி (கந்தர்மடம்), சிவராசா (யாழ். அளவெட்டி அருணோதயா கல்லூரி - ஓய்வுநிலை ஆசிரியர் - உரும்பிராய்), சிவானந்தன் (Registered Licenced Surveyour - உரும்பிராய்), பரமேஸ்வரி (கந்தர்மடம்) ஆகியோரின் சகோதரனும், பத்மலோயினி (கனடா), சிவபாதம் (ஜேர்மனி), லோகநாதன் (காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஓய்வுநிலை உத்தியோகத்தர் - கந்தர்மடம்), ரஞ்சினி (உரும்பிராய்), சிறிரஞ்சன் (இந்தியா) காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், இராசரெட்ணம், சோதிலிங்கம், தெய்வநாயகி மற்றும் குணசேகரம் (காங்கேசன்துறை லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம் - ஓய்வுநிலை உத்தியோகத்தர் - தையிட்டி) ஆகியோரின் மைத்துனரும், நீலாம்பிகை, தெய்வநாயகி, சிவகுமாரி, காலஞ்சென்றவர்களான பரமன், இலங்கைநாயகி ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னார் ஓய்வுபெற்ற உயர் அதிகாரி - இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S) முன்னாள் மாவட்ட மேலாளர் ஐக்கிய நாடுகள், மாவட்ட முகாமையாளர் - UN - Habitet, முன்னாள் செயலாளர் - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, முன்னாள் செயலாளர் - இலங்கை வடக்கு, கிழக்கு கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு, முன்னாள் பதிவாளர் யாழ் / பல்கலைக்கழகம், முன்னாள் தலைவர் - யாழ். இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கம் - யாழ்கிளை போன்ற பதவிகளை வகித்தவர்.

இவர் கற்ற ஆரம்பக்கல்வி யா/கந்தர்மடம் சைவ பிராகாச வித்தியாசாலை, உயர்கல்வி யாழ். இந்துக்கல்லூரி (நாடகம், பேச்சு, விளையாட்டு போன்ற பலவற்றிலும் கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர், பட்டப்படிப்பு பேராதனை பல்கலைக்கழகம் - புவியியல்துறை, பேராதனை குறிஞ்சி குமரன் கோவிலை ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவர்.

யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி, பேராதனை பல்கலைக்கழம், வட்டுக்கோட்டை Jaffna College ஆகியவற்றின் விரிவுரையாளர், புத்தளம் சிமெந்து தொழிற்சாலை முகாமையாளர், இலங்கை நிர்வாக சேவையில் மாவட்ட நில அதிகாரி கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ACLG மன்னார், மேலதிக அரசாங்க அதிபர் - மட்டக்களப்பு, அரசாங்க அதிபர்- அம்பாறை, செயலாளர் - வடக்கு - கிழக்கு மாகாணம் கல்வித்திணைக்களம், செயலாளர் - இந்துசமய விவாகார அலுவலர்கள் அமைச்சு.

அன்னாரின் காலஞ்சென்ற தந்தை கந்தையா நல்லூர் முருகனை தோழில் சுமந்து செய்த தொண்டினை பள்ளிப்பராயம் முதல் தானும் சகோதரர்களும் இணைந்து இன்று வரை செய்ததன் பயனால் வைகுந்த ஏகாதசி தினமான அன்று சொர்க்கவாசல் திறந்திருக்க நம்மைவிட்டு பிரிந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Cambridge UK என்னும் இடத்தில் UK நேரப்படி இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை 2 pm - 4 pm (இலங்கை நேரப்டி 7.30 - 9.30 நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள், குடும்பத்தினர்,
சிவானந்தன்
(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)
077 634 1541

பலாலி றோட்,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு - அம்பலப்பெருமாள் குளம்

# உவர்ப்பரம்பலை உடன் கட்டுப்படுத்தக் கோரிக்கை

**முல்லைத்தீவு, டிசெ. 31**
**முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள் குளத்தில் ஏற்பட்ட உவர்ப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

எமது கிராமத்தில் காணப்படுகின்ற அம்பலவன்சின்னக்கட்டுக் குளத்தின் கீழ் விவசாயம் செய்யப்படும் பெருமளவு நிலப்பரப்பு உவர் நிலமாக மாறியுள்ளதால் மரங்களும் அழிவடைந்து வருகின்றன. வாழ்வாதாரத்துக்கு விவசாயத்தை நம்பி இருக்கும் கிராமத்தில் உவர்ப்பரம்பல் வயல் நிலங்களில் பரவத் தொடங்கிய தன் காரணமாக உவர்ப்பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அம்பலப்பெருமாள் குளம் கிராமத்துக்கு உவர்த் தடுப்பணைகள் அமைத்தும், சவுக்கு மரக்கன்றுகளை கூடுதலாக நடுகை செய்வதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ரி-13)



# சுமாத்ராவில் நடுக்கம் மீனவருக்கு எச்சரிப்பு

கொழும்பு, டிசெ. 31
வடக்கு சுமாத்ராக் கடற்பகுதியில் மிகப்பெரிய நிலநடுக்கம் நேற்றுக் காலைபதிவாகியுள்ளது. இதனால் மீனவ சமூகம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தோனேஷியா அருகே புலாவ் பாபி தீவிலிருந்து மேற்காக 394 கிலோமீற்றர் தூரத்தில் 6.6 மெக்னிடியூட் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தின் விளைவாக இலங்கையின் கரையோர மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் சுனாமி முன் எச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது. (ச-இ)

# மாகாணசபைகளின் கீழ் பாடசாலைகள் நிர்வாகம்

கொழும்பு, டிசெ. 31
கல்விச் சீர்திருத்தங்களின் பிரகாரம் அனைத்துப் பாடசாலைகளும் மாகாணசபைகளின் கீழ் இயங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.
கல்விக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அதன்படி தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள் என இருவகையாக இனிப் பாடசாலைகள் பேணப்படாது. கல்வியமைச்சால் பாடசாலைகளின் மேற்பார்வை மற்றும் நிர்வாகம் மாகாணசபைகளுக்கு மாற்றப்படவுள்ளது.
ஆரம்ப தரம், 6 முதல் 9ஆம் தரம் மற்றும் உயர்தரம் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் பாடசாலைகளை நடத்துவதற்கும், நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இந்தத் திட்டத்தை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் தரம்-6 முதல் ஆங்கிலத்தை கட்டாயமாக்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஆயுள்வேத வைத்தியசாலையில் முதியவர் மீது தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 31
கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த குறித்த முதியவர் பாரிசவாதம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். அவரை பராமரிப்பதற்கு ஒருவர் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.
இந்நிலையில் அந்த முதியவர் மீது நேற்றையதினம் குறித்த பராமரிப்பாளர் தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் அந்த முதியவரை உறவினர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

# பயிரழிவைப் பார்வையிட அதிகாரிகள் வருவதில்லை

## விவசாயிகள் ஆதங்கம்

முல்லைத்தீவு, டிசெ. 31
முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பெருமழையால் ஏற்பட்ட பயிரழிவுகளைப் பார்வையிடுவதற்கு அதிகாரிகள் வருகை தரவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.
விவசாயிகள் கமநலசேவை நிலையங்களுக்கு பயிரழிவு தொடர்பாக முறைப்பாடு தெரிவித்தால் பயிரழிவுகளை படமெடுத்து அனுப்பும்படியே தெரிவிக்கின்றனர். ஆனால், நேரில் பயிரழிவுகளைக் காண்பதற்கு அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொள்வதில்லை என்று விவசாயிகள் மேலும் குற்றஞ்சாட்டினர். (ம-ரி-13)

# காட்டுக்குள் கஞ்சா; பொலிஸார் சுற்றிவளைப்பு

கொழும்பு, டிசெ. 31
மொனராகலை - ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடவலவை சரணாலயத்துக்கு அருகில் கஞ்சாச் செடி பயிரிடப்பட்ட தோட்டமொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.
இதன்போது நான்கரை ஏக்கர் பரப்பளவில் வளர்க்கப்பட்ட கஞ்சாச் செடிகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்., டிசெ. 31
கற்கோவளம் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
20 மில்லிகிராம் ஹெரோய்னுடன் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்ட நிலையில் அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ரி-125)

# ஐஸ் போதையுடன் இளைஞன் கைது!

**முல்லைத்தீவு, டிசெ. 31**
**முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதியில் திம்பிலி சந்திக்கு அருகில் ஐஸ்போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞன் ஒருவரை புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்தனர்.**
**15 மில்லிகிராம் கொண்ட 8 சுருள்களில் சுற்றப்பட்டிருந்த நிலையில், ஐஸ் போதைப்பொருள்களும் அவரிடமிருந்து மீட்கப்பட்டது. சந்தேக நபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரி-19)**



# 6 மில். முட்டைகள் மீளவும் இறக்குமதி

**கொழும்பு, டிசெ. 31**
**இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 6 மில்லியன் முட்டைகளைக் கொண்ட கப்பலொன்று நாட்டை இன்று வந்தடையவுள்ளது என்று அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**
**இவை வரும் வாரம் முதல் நாடளாவிய ரீதியாகவுள்ள சதொச வர்த்தக நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. எதிர்வரும் மாதங்களில் முட்டை ஒன்றை 30 முதல் 35 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்ய முடியும் என்றும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ச-இ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்



**கிளிநொச்சி, டிசெ. 30**

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பசுந்துளிர் இதழ் 8 நூல் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவர் சி.ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் சு.முரளிதரன் கலந்துகொண்டார்.

பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலரும், கலாசாரப்பேரவை தலைவருமான சி.ச.கிருஷ்ணேந்திரன் தலைமை உரையாற்றினார்.

நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் கலைத்தென்றல், இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் தேசிய கலை இலக்கியப் போட்டிகள், பிரதேச மட்ட திருக்குறள் போட்டி மற்றும் பிரதேச மட்ட மாண்புறு மாணவர் சமுதாய திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ரி-75)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர்ப் பிரதேசசபையால் பிரதேச ஆளுகைக்குட்பட்ட சனசமூக நிலையங்களிடையே தரப்படுத்தல் போட்டி நடத்தப்பட்டது. இதில் முன்பள்ளி தரப்படுத்தலில் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. சிறந்த குருதிக்கொடை முகாமுக்கான விருதை கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையம் தட்டிச் சென்றது. இதற்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நல்லூர் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)



யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் ஒளிவிழா நிகழ்வு யாழ். பொதுசனநூலகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ். மாநகரசபை பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.அன்ரன் பிரான்சிஸ்தலைமையில் அண்மையில் நடைபெற்றது. யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். நிகழ்வில் றொனால்ட் சுஜிபன், என்.மோகன் ஆகியோர் கிறிஸ்தவப்பிறப்பு வாழ்த்துச் செய்தியையும், ஆசிச் செய்தியையும் வழங்கினர். (ரி-20)



யாழ். பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ரி)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ரி-66)



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு துணுக்காய் பிரதேச செயலகத்தால் மாற்றுத் திறனாளிகள்தினம் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது.

பிரதம விருந்தினராக பிரதேச செயலர் திருமதி ச.லதுமீரா, சிறப்புவிருந்தினராக கணக்காளர் கு.சஜீபன், கௌரவ விருந்தினராக ஒளிரும் வாழ்வு அமைப்பின் தலைவர் சி.சிவரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-75)




இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் மாதகல், சம்பில்துறை சம்புநாத ஈச்சர முன்றிலிலிருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மீகப் பாத யாத்திரை அண்மையில் இடம்பெற்றது. இந்த ஆன்மீகப் பாதயாத்திரையில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த சிவதொண்டர்கள் பங்கேற்றனர். (ச-66-125)



'கப்பல் மாதா உதவும் கரங்கள்' அமைப்பால் மாணவர்கள், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கட்டைக்காடு மரியாள் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் கலந்துகொண்டார். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குக் கடத்தவிருந்த பெருமளவு பொருள்கள் தமிழகத்தில் பறிமுதல்

சென்னை, டிசெ. 31

**தமிழகத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்தவிருந்த பெருமளவு பொருள்கள் தமிழகம் இராமநாதபுரத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளன.**

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டன. இலங்கை ரூபாவின் மதிப்பில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## விஜயகாந்த் மறைவுக்கு புளொட் அனுதாபம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

தேசிய முற்போக்குத் திராவிடர் கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்தின் மறைவுக்கு புளொட் அமைப்பு தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.


இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

திரையுலக வாழ்க்கைக்கு வரமுன்பும் வந்த பின்பும், அரசியல் வாழ்க்கையிலும் தமிழ்மொழி மீதும் தமிழர்கள் மீதும் மாறாத பற்றுக் கொண்டிருந்த 'கப்டன்' விஜயகாந்த், இலங்கைத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்திருந்ததோடு போராளிகள் அமைப்புகளுடன் ஆத்மார்த்தமான உறவினைக் கொண்டிருந்தார். ஈழத்தில் தமிழ் மக்களுக்கு நீண்டு நிலைத்திருக்கக் கூடிய விடுதலை கிடைக்க வேண்டுமெனும் நிலைப்பாட்டைத் தனது வாழ்நாள் முழுவதும் கொண்டிருந்த அவரது மறைவு, எமது பலத்துக்கு குறிப்பிடத்தக்கதோர் இழப்பாகும் - என்றுள்ளது. (ரி-27)

## விஜயகாந்துக்கு வவு.வில் அஞ்சலி

தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் தலைவரான விஜயகாந்த் சுகவீனம் காரணமாகக் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்த நிலையில், அவருக்கு வவுனியாவில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு, பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-ரி-110)



தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் த.கிருபாகரனின் சேவைநலன் பாராட்டு விழா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ரி-159)



காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் அரியாலை சிறீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ச-9)



மருதங்கேணி கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு அண்மையில் குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டன. திட்டமிட்ட கழிவகற்றலை ஊக்குவிக்கும் வகையில் இந்தக் கழிவகற்றும் தொட்டிகள் வழங்கப்பட்டன. (ரி-100)



வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஒளிவிழாவும், தேசிய உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் சுன்னாகத்தில் அமைந்துள்ள பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-66)



கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில், அவுஸ்திரேலியன் மெடிக்கல் பவுண்டேசனின் நிதிப்பங்களிப்புடன் சர்வதேச றோட்டறிக் கழகங்களால் 6.6 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ இயந்திரம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அண்மையில் வழங்கப்பட்டது. (ரி-113)



## கல்மடுக்குளத்தில் புனரமைப்பு நிறைவு

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான குளங்களில் ஒன்றான கல்மடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

798 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. (ரி-113)



தென்னிந்தியத் தொலைக்காட்சியின் 'ஸரிகமப' பாடல் போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து பங்குபற்றி வெற்றியீட்டிச் சாதனை படைத்த கில்மிஷா நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயரைச் சந்தித்து ஆசிபெற்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம் (V)
1986 சித்திரை கிரகபாவம்,
14 1/4, செவ்வாய் 2இல்,
2ம் பாதம்.
சுயதொழில் செய்யும்
மணமகனுக்கு
மணமகள் தேவை.

(cs.52692) (N.I)

தொடர்பு: 077 547 0631

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் டவுண்
ஸ்டேன்லி வீதிக்கு
அருகாமையில்
03 பரப்புக் காணி
வீட்டுடன் உடனடி
விற்பனைக்கு உண்டு.

தரகர் வேண்டாம்
தொடர்புகளுக்கு:- 077 522 2613

## விற்பனைக்கு

பாவித்த ஆங்கில தட்டச்சு (Olympia - Portabele), தமிழ் தட்டச்சு (42 Cm) அகலமுடைய தட்டச்சு செய்யக்கூடியது விற்பனைக்குண்டு.

077667 5080 55 பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.

## மணமகள் தேவை

ஐரோப்பிய நாட்டில் PHD பயின்று வரும் (39) சிம்மராசி உத்திர நட்சத்திரம், வெளிநாட்டு மணமகள் தேவை. (படிப்பு எதிர்பார்க்கவில்லை)

076 108 2533

## விற்பனைக்கு / வாடகைக்கு

யாழ் நீதிமன்றத்துக்கு முன்பாக 2 பரப்புக் காணியும் யாழ். K.K.S வீதியில் 10 பரப்பில் அமைந்துள்ள 3 வீடும், மாடிக் கட்டடமும், யாழ். கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 3 பரப்பு காணியும்,விற்பனைக்கு உண்டு. அத்துடன் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 3 கடைகளும் , ஸ்ரான்லி வீதியில் 4 கடைகளும் வாடகைக்குண்டு.

077 723 2535

## கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் BOC வங்கிக்கு
அருகில் கடைத்தொகுதியின்
இரண்டாவது தளம்
(1650 sqft) வடகைக்கு உண்டு.

077 620 5628

## விற்பனைக்கு

Toyota town Ace -20 என்னும் பெற்றோல் வாகனம் விற்பனைகு உண்டு.

077667 5080 55 பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.

## தேவை

பில் கிளாக், பொதியிடல், மாவறுத்தல், உதவியாளர் என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.
பிருந்தா மில், 184, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Tel:077 174 6101

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக செயலிழப்பால்
பாதிப்படைந்த A- இரத்த வகை உடைய
நபர் சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக
சிறுநீரக தானம் செய்ய விரும்பும்
A மற்றும் O இரத்தவகை
உடையவர்களை தேடுகிறார்.
HLA report உடையவர்கள்
வரவேற்கப்படுவர்.
**தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு - 0763342991

## வைத்திய சேவை

யாழ்ப்பாண நகரத்தில் அண்மையில்
அரசாங்க வைத்தியசாலையில்
வேலை செய்து ஓய்வு பெற்ற
வைத்திய உத்தியோகத்தர்.
யாழ்ப்பாண நகரத்தில் உள்ள
தனியார் வைத்தியசாலைகளில்
வேலை செய்ய விரும்புகின்றார்.

தொடர்பு: 077 765 0666

## ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 அரசடி வீதி 37 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சுந்தரம் பெண் நாகம்மாவின் உரிமையாளர் என் ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை தம்பித்துரை பெண் தில்லைநாயகிதேவி, சவுந்தரநாயகம் தம்பிராசாவும் பெண் சரஸ்வதியும், தம்பிநடராசா ஆலாலசுந்தரம் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு ப. இராசரத்தினம் முகதாவில் 1967.11.27ம் திகதி 71 ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 6 பங்கினை இராமச்சந்திரன் பெண் இந்திராதேவி என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

மேலும் கமலாதேவி செல்லையா என்பவர் பிரசித்த நொத்தாரிசு சா.கந்தப்பன் முகதாவில் 1971.06.26 ல் 11588 ம இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 3 7/8 ல் சொரியலாக 1/2 பங்கினை தம்பிநடராசா சீதாதேவிக்கு வழங்கியுள்ளார்.

சின்னையா இராமச்சந்திரனும் பெண் இந்திராதேவியும் பிரசித்த நொத்தாரிசு ப.இராசரத்தினம் முகதாவில் 1978.10.01 ல் 332 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 3/6 பங்கினை (காணியில் மட்டும் சொரியலாக இது நிலப்பரப்பு 2 குளி 12) அளவு கொண்ட ஆதனத்தை. தம்பிநடராசாவின் பிள்ளைகளான சீதாதேவி. சாந்தலட்சுமி ஆகியோருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்

தம்பிநடராசா மகள் சாந்தலட்சுமி என்பவர் பிரசித்த நொத்தாரிசு த.சோமசுந்தரம் முகதாவில் 1979.08.05 ல் 269 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 ல் சொரியலாக 1/2 பங்கினை தம்பிநடராசா மகள் சீதாதேவி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

சுந்தரம்பிள்ளை தம்பிநடராசாவும் தம்பித்துரை கைம்பெண் தில்லைநாயகி. தம்பிநடராசா ஆலாலசுந்தரம். யேம்ஸ் சவுந்தரநாயகம். தம்பிராசா கைம்பெண் சரஸ்வதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு தி.ஜெகதீசன் முகதாவில் 1988.10.15 ல் 2427 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 ல் சொரியலாக 19/20 பங்கினை தம்பிநடராசா மகள் சாந்தலட்சுமி என்பவருக்கு நன்கொடையளித்துள்ளனர்.

இராமச்சந்திரன் கைம்பெண் இந்திராணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் 2004.03.25 ல் 2934 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 ல் சொரியலாக 1/40 பங்கினை உருத்திரதீசன் மனைவி கௌரி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர். இவ்வுறுதியில் இவ்வாதனம் தனது சகோதரியாகிய சீதாதேவி சந்ததியற்று இறக்க தனக்கு வந்தடைந்த சகோதரவழிப் பங்கு எனக் குறிப்பிட்டுள்ளார்.

சின்னையா கைம்பெண் கமலாதேவி என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி. வீரகத்திப்பிள்ளை முகதாவில் 2004.12.18 ல் 5582 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2குளி 12ல் 1/40 சொரியலான பங்கினை இராசகோபால் பெண் சாந்தலட்சுமி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இவ்வாதனம் அடியற்று காலஞ்சென்ற சீதாதேவி என்பவரின் முதுசப்பங்கு எனகுறிப்பிடப்பட்டுள்ளது.

இராசகோபால் பெண் சாந்தலட்சுமி (தம்பிநடராசா மகள் சாந்தலட்சுமி) என்பவர் பிரசித்த நொத்தரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 2015.08.04 ல் 9835 ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் உறுதிமூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 10.76 அளவு கொண்ட ஆதனம் தனக்கு தாய் வழி வந்த முதுசமாக காட்டியுள்ளார்

தம்பிநடராசா மகள் சாந்தலட்சுமி என்பவர் 31.12.2018 ல் 589 ம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு வி.மணிவண்ணன் முகதாவில் நிறைவேறிய திருத்தலும் உறுதிப்படுத்தலும் உறுதி மூலம் ஆதனத்தின் விஸ்தீரண அளவு திருத்தப்பட்டமை தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

தம்பி நடராசா மகள் சாந்தலட்சுமி என்பவர் பிரசித்த நொத்தாரிசு ஜ.அபர்னா முகதாவில் 18.07.2022 ல் 1457 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 14.90 அளவு கொண்ட ஆதனத்தை சிவபூமி அறக்கட்டளைக்கு நன்கொடையளித்துள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி. வண்ணார்பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்னை கிழக்கு இறை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு. யாழ் மாநகரசபை மாதவன் வளவும் குசவன் புலமும் குசவன் வளவும் நிலப்பரப்பு 2 குளி 12 உம் அதற்குச் சேர்ந்தவைகளும் இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களால் 2011:04 29 ஆம் திகதி அளந்து வரைந்த 471 / 11ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1.2 என பிரித்துக் காட்டப்பட்டதன்படி நில பரப்பு 2 குளி 11.96 இதில் துண்டும் என காட்டப்பட்ட நிலபரப்பு 2 குளி 10.76. இந்த நிலப்பரப்பு 2 குளி 10.76 ல் நிலப்பரப்பு 1 குளி 14.90 உம் அதனைச் சேர்ந்தவைகளும். இது 2021.11.30 ஆம் திகதி ந.கேதீஸ்வரன் முகதாவில் இல.5221 ல் வரையப்பட்ட நில அளவைப் படத்தில் துண்டு 1 என காட்டப்படுள்ளது.

**இந்த நிலப்பரப்பு 1 குளி 14.90 ற்கும் படத்தின் படி எல்லைகள்**

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | துண்டு 2 என்ற மீதி ஆதனமும் நிரஞ்சன் பெண் சிவப்பிரியாவின் ஆதனமும், உருத்திரதீசன் பெண் கௌரியினதும் ஆதனங்கள் |
| வடக்கு | - | செல்லையா சிவசோதி பூபாலசிங்கத்தின் ஆதனம் |
| தெற்கு | - | அரசடி வீதி |
| மேற்கு | - | சின்னையா சிவசுப்பிரமணியத்தின் உரிமைக்காரரின் ஆதனம் |

இதனடங்கலும் இதற்குச்சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை சிவபூமி அறக்கட்டளை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வானத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையல் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிவபூமி அறக்கட்டளை என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ். மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில்
8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25832) (N.1)

077 755 1193


5 நட்சத்திர விருது வென்ற இலங்கையின் முதற்தர வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமான எமரல்ட் ஐல் வழங்கும்

மருத்துவ மாதுக்களுக்கு
சிங்கப்பூர் வேலைவாய்ப்பு
NURSES - 5வது தொகுதி

NO IELTS Required

396 NOS ENROLLED NURSES Salary SGD 1900 (LKR 454,100)

387 NOS REGISTERED NURSES Salary SGD 2500 (LKR 597,500)



இறுதி நேர்முகத்தேர்வு ஜனவரி 14, 15, 16 திகதிகளில் நடாத்தப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ஜன. 17ல் SNB தேர்வு நடாத்தப்படும்.

சிங்கப்பூர் அரச நேர்ஸிங் நிபுணர்களால் நேர்முகத்தேர்வு நடாத்தப்படும்

முதல் மாதசம்பளத்துடன் ஒரு முறை இடமாற்ற கொடுப்பனவு (SGD1000) வழங்கப்படும்

2 வருட ஒப்பந்தத்திற்கு 4 மாத போனஸ்

இலவச விமான டிக்கட்

S.L.B.F.E. Approval No. AL/1162/ADVT/21/23
Registration Required From the S.L.N.C.

1SGD LKR 239

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
SLBFE Lic No. 1162

0772 442680
0773 327769
0777 324 004
www.emeraldisle.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# 2023 - வதைகளின் வருடம்

பல்வேறுபட்ட சவால்கள், நெருக்குவாரங்கள், பொருளாதார நெருக்கடிகள், அரசியல் பிரச்சினைகள் நிறைந்ததாக இருந்த 2023ஆம் ஆண்டு இன்று முடிவுக்கு வருகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, காணி விடுவிப்பு, அரசியற்கைதிகளுக்கு விடுதலை, பொருளாதார மீட்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு 2023ஆம் ஆண்டு ஒரு விடியலாக அமையும் என்று ரணில் அரசாங்கம் தம்பட்டமடித்த போதிலும் எந்தவொரு விடயத்திலும் 'உண்மையான மாற்றம்' என்பதைக் கண்டாகவில்லை. மாறாக 2022ஆம் ஆண்டு எவ்வளவோ பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு 2023ஆம் ஆண்டு மக்களை வதைத்தெறிந்திருக்கின்றது என்பதே உண்மை.

2023 ஆண்டு பிறந்த கையுடன், மின்கட்டணத்தைச் சடுதியாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகளைத் துரிதகதியில் முடுக்கி விட்டிருந்தார் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர. அதில் ஆரம்பித்த விலையேற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாக சங்கிலிக்கோர்வையாக ஆண்டின் இறுதிநாளான இன்று வரையும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆக, 2022ஆம் ஆண்டு நாட்டின் தேசியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலையை, பின்னடைவை மக்கள்மீது திணித்து, அப்பாவி அடித்தட்டு மக்களின் வயிற்றிலடித்து - அந்தப் பணத்தை வைத்து இந்தத் தளம்பலை முடியுமான வரையில் சரிசெய்ய 'ரணில் +மஹிந்த அன்ட் கோ' எத்தனித்தது எத்தனித்துக்கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் இந்த விஷப்பரீட்சையால் வாழ்வதற்கான போராட்டத்தில் ஒவ்வொரு குடிமக்களும் இன்று தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்த விடயத்தில் தமிழர்களின் நிலைமை இன்னும் துயரத்துக்குரியதே. 2023ஆம் ஆண்டில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று குறுகிய அவகாசங்களை வழங்கி 'போர்க்கால அடிப்படையில்' புறப்பட்ட ரணில் இன்று 'கப்சிப்' என்றிருக்கின்றார். 13ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று அரசமைப்பில் இருக்கின்றது. அரசமைப்பில் இருக்கும் தீர்வை நடைமுறைப்படுத்துவதில் எந்தச் சிக்கலுமில்லை என்று இந்த வருடத்தின் ஆரம்ப வாரங்களில் தெரிவித்த அவர், 'நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பலமாக இல்லை. தன்கட்சி ஆட்சியமைத்தால்தீர்வு வழங்கப்படுவது இலகு'என்றவாறாக இப்போது கதையளக்கின்றார். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை விடயதானங்களிலும் எஞ்சியிருப்பது இதே மாற்றான்போக்கு மனோநிலையே.

ஆனால், ஆட்சியாளர்களோ அதிகாரபீடங்களோ மக்களின் துன்ப, துயரங்களைக் கிஞ்சித்தும் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. தங்கள் அரசியல் சதியாட்டங்களை அரங்கேற்றுவதிலேயே தற்போதும் அவர்கள் குறியாகவிருக்கின்றனர். இதில் பகடையாகியிருப்பது என்னமோ அப்பாவிப் பொதுமக்கள்தான். 2018ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் பயணப்பாடு பல்துறைகளிலும் வீழ்ந்தே வந்திருக்கின்றது. 'இதைவிட கடந்த வருடம் எவ்வளவோ பரவாயில்லை' என்று சொல்லும் அளவுக்குத்தான் இலங்கையின் ஒவ்வொரு வருடங்களும் கடந்து செல்கின்றன. இந்தத் துயர்கதையின் மற்றொரு பக்கம்தான் 2023.




பொருளாதாரப் பேரிடர்நிலை

# உயர்நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துங்கள்

## பேராயர் மல்கம் வலியுறுத்து

**கொழும்பு, டிசெ. 31**

**சட்டத்தை நிலைநாட்டாமல் இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லமுடியாது. எனவே, உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்புகளை செயற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.**

'நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நீதி, நியாயம் நிலைநாட்டப்படுமா என்பது தொடர்பில் எமக்கு ஐயப்பாடு எழுந்துள்ளது. ஏனெனில் நடவடிக்கைகள் மூடிமறைக்கப்படுகின்றன. உதாரணமாக பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதற்கமைய அரசு செயற்பட வேண்டும். எனினும், இது விடயத்தில் மௌனம் காக்கப்படுகின்றது. அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இது தவறாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-44)

## 350 இலங்கையர்கள் ஜோர்தானில் நிர்க்கதி

ஜோர்தானில் உள்ள ஆடைத்தொழிற்சாலை யொன்றில் பணியாற்றிய 350 இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்ப முடியாமல் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த நான்கு வருடங்களாக அந்த ஆடைத்தொழிற்சாலையில் அவர்கள் பணிபுரிந்து வந்துள்ளனர். தற்போது ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இதனால் மேற்படி இலங்கையர்கள்தங்க இடமின்றி தொழிற்சாலையின் விறாந்தையில் தங்கியுள்ளனர். இலங்கைத் தூதரகம் தம்மை மீட்டு நாட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-6)

## நீர்க்கட்டணம் செலுத்த பொதுமக்கள் பின்னடிப்பு

கொழும்பு, டிசெ. 31

நீர்க்கட்டணம் செலுத்துவோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை சுமார் 12 பில்லியன் ரூபா எனவும், நிலுவைக் கட்டணங்களைச் செலுத்தாதவர்களுக்கு அடுத்தாண்டு நீர் வழங்கல் துண்டிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## பல்கலை விகாரையில் மருத்துவ முகாம்

கிளிநொச்சி, டிசெ. 31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள விகாரையில் மலேசியா மருத்துவர்களின் பங்கேற்புடன் மருத்துவ முகாமொன்று அண்மையில் நடைபெற்றது.

500 பேருக்கான மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சையும், 200 பேருக்கான உலருணவுப் பொதிகளும் இதன்போது வழங்கப்பட்டன (ஒ-113)

## அனுமதியற்ற கட்டுமானம்: தடுக்க வருகின்றது சட்டம்

கொழும்பு, டிசெ.31

அனுமதியற்ற கட்டுமானங்களைக் கையாள்வதற்கு அதிக அதிகாரத்தை வழங்கும் வகையில் உள்ளூராட்சிச் சட்டத்தை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அனுமதியற்ற கட்டுமானங்களைத் தடுப்பதற்கு உள்ளூராட்சிச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார். (எ-இ)

## நாளை

01.01.2024
**திங்கட்கிழமை**
**மார்கழி 16**

ஆங்கிலப் புத்தாண்டு

சுபநேரம் : 12.29 - 01.59
ராகுகாலம் : 07.59 - 09.29

## நாளொரு நல்வார்த்தை

**உண்மையான வாழ்க்கை என்பது மற்றவர்களுக்காக வாழ்வது.**

**- புரூஸ் லீ -**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் ரணிலுக்கும் பொறுப்புண்டு

## சுட்டிக்காட்டுகின்றது சுதந்திர மக்கள் சபை

**கொழும்பு, டிசெ.31**

**பொருளாதாரப் பாதிப்புகளுக்கு ராஜபக்சக்களைப் போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக்கூறவேண்டும். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா? அல்லது பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முன்வைக்கும் தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதா? என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்கவேண்டும்.**

-இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பொதுச்செயலாளர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

"2024ஆம் ஆண்டு அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் பெரும் மாற்றம் ஏற்படும்.

பொருளாதாரப் பாதிப்புக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு செயற்படுகிறார்.

பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்சக்களைப்போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வரையறையற்ற வகையில் சர்வதேச பிணைமுறியங்களில் இருந்து பெற்றுக்கொண்ட கடன்களால் இலங்கையில் அரச முறை கடன்கள் நெருக்கடிக்குள்ளானது'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-இ)

# தோட்டத்தொழிலாளருக்கு வேதன உயர்வு எதற்கு?

## கேட்கிறார் பெருந்தோட்ட கம்பனிகள் சங்கத் தலைவர்

கொழும்பு, டிசெ.31

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று பெருந்தோட்டக் கம்பனிகள் சங்கத்தின் தலைவர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்ட நிறுவனங்களுடன் அண்மையில் நடத்திய சந்திப்பில் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா நாள் சம்பளமாக வழங்கப்பட வேண்டுமென தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு அவர்கள் பறிக்கும் கொழுந்தின் அளவுக்கு ஏற்ப ஊக்குவிப்பை வழங்கலாமேயன்றி சம்பள உயர்வு வழங்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# வீட்டுப் பணியாளர்களாக 537 பெண்கள் பயணம்

வவுனியா, டிசெ. 31

2023ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஊடாக 537 பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணியாளர்களாகச் சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மாவட்ட இணைப்பாளர் சி.கிருஸ்ணகுமார் தெரிவித்தார்.

'பொருளாதார நெருக்கடியின் பின்னரான காலப்பகுதியில் அதிகளவான ஆண்கள் மற்றும் பெண்கள் வீட்டுப் பணியாளர்கள், தொழிலாளர்களாக சவூதி, கட்டார், குவைத் உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாதாந்தம் 175 பேர் வரை பயணமாகின்றனர்' என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஒ-110)

# வன்முறை அதிகரிப்பு இயல்புநிலை பாதிப்பு!

## மாளிகைத்திடல் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடமராட்சி கிழக்கு, குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவருவதனால் மக்களின் நாளாந்த இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இந்தப் பகுதியில் போதைப்பொருள் மற்றும் மதுபானப் பயன்பாடு அதிகரித்துள்ளதால் தகராறுகள் இடம்பெறுவதுடன் வாள் வெட்டு, வீடுடைப்பு, தாக்குதல்கள் போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகளும் தலைதூக்கியுள்ளன. அண்மையில் இந்தப் பகுதியில் வீடுகள் மீது இரவு நேரத்தில் கற்கள் வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த பருத்தித்துறை பொலிஸார் கவனம் செலுத்தாமையால் மக்கள் தினமும் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, தற்போது விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் விசேட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இதுதொடர்பில் கவனம் செலுத்தி வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் - என்றனர். (ச-100)



# உடுத்துறையில் தாய்லாந்து தெப்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை வேம்படி கடற்கரையில் தாய்லாந்து கொடியுடன் மிதந்து வந்த தெப்பம் ஒன்று கடந்த புதன்கிழமை மதியம் கரையொதுங்கியுள்ளது.

கடும் காற்று வீசிவரும் நிலையில் கடல் கொந்தளிப்புக்கு மத்தியில் மர்மப்பொருள் ஒன்று உடுத்துறை கடற்கரை பகுதியைநோக்கி வருவதை அவதானித்த அங்கிருந்தவர்கள் பரபரப்படைந்தனர். சில மணி நேரத்தில் கரையொதுங்கியது தெப்பம் எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய தெப்பத்தை கடற்படையினர் இழுத்து கரைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

தாய்லாந்து, மியான்மர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து விடப்படும் மூங்கில் தெப்பங்கள் இவ்வாறு வடமராட்சி கடற்பரப்பில் கடந்த காலங்களில் கரையொதுங்கியிருந்தன. தமது முன்னோரின் நினைவாக அவர்களின் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்காக இவ்வாறு அமைக்கப்படும் தெப்பத்தில் குடில் அமைத்து அவர்களுக்கு பிடித்த உணவுகளை வைத்து விளக்கேற்றி கடலில் விடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-100)

# 'அரகலய' வன்முறை விசாரிக்கக் குழு தேவை

## மொட்டுக்கட்சி கூறுகிறது

கொழும்பு, டிசெ. 31

கடந்த ஆண்டு இடம்பெற்ற 'அரகலய' போராட்டத்தின்போது இடம்பெற்ற வன்முறைகளை விசாரிப்பதற்கான குழுவொன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்று மொட்டுக்கட்சியின் தேசிய மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

'அரகலய' போராட்டத்துக்கு இறுதிக்கட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஆதரவு தெரிவித்திருந்தார்.

தற்போது 'அரகலய' போராட்டக்காரர்கள் பலர் தற்போது ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிகின்றனர்.

இவர்களுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பாரா என்பது சந்தேகம்.

அந்தவகையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் புதிய ஜனாதிபதி விசாரணைக் குழு வொன்றை நியமிப்பதே பொருத்தமானது என்றும் மொட்டுக்கட்சி மாநாட்டில் கருத்துப் பகிரப்பட்டது. (ச-6)

# வடக்கு மாகாண தயாரிப்பாளர்களை இந்தியாவுடன் ஒருங்கிணைப்போம்

## துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31


வடக்கு மாகாண மற்றும் இந்திய தயாரிப்பாளர்களை ஒருங்கிணைத்து வடமாகாண வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருப்பது எமது நோக்கமாகக் காணப்படுகின்றது என யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய்பாஸ்கர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற உள்ளூர் உற்பத்தியாளர்களின் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தயாரிப்புத் தரம் உயர்வாக இருக்கவேண்டும், சந்தையைச் சென்றடைவது என்பன ஏற்றுமதிக்கு முக்கியமான விடயங்கள். இந்த விடயத்தை இங்கு இந்திய அரசும், தனியார் நிறுவனங்களும் முன்னெடுக்கும்.

வடக்கின் தயாரிப்பாளர்களுக்குரிய இயந்திரங் களை இந்தியாவிலிருந்து கொண்டு வந்து கொடுப்பதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்படு கின்றன. குறிப்பாக வடக்கின் பனைவளம் மற்றும் தனித்துவமான தயாரிப்புகளை மேம்படுத்தி வடக்கின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருப்பதே எமது நோக்கம்- என்றார். (ஒ-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் 13பேர் நிபந்தனையுடன் விடுதலை

## 12 பேருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31

**பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்த 13 தமிழக மீனவர்களை நிபந்தனையுடன் விடுவித்தும் ஏனைய 12 மீனவர்களுக்கான விளக்கமறியலை நீடித்தும் பருத்தித்துறை நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.**

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த 10 ஆம் திகதி 2 படகுகளுடன் நாகபட்டினத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மன்றில் முன்னிலையான கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அரச சட்டத்தரணி நேரில் முன்னிலையாகி படகு உரிமையாளரை வழக்கில் சேர்ப்பது தொடர்பில் மன்றில் விண்ணப்பம் செய்வதற்கு அவகாசம் வழங்குமாறு கோரியிருந்தனர். இதற்கமைவாக படகில் கைதான 12 மீனவர்களையும் வரும் ஜனவரி 3 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, மற்றொரு படகில் கைது செய்யப்பட்டிருந்த 13 மீனவர்களுக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை வழங்கி கடந்த 22 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் கைது நடவடிக்கையின்போது கடற்படையினரைத் தாக்கிய குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணைகளுக்காக நேற்றுவரை விளக்கமறியலை நீடித்தும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணையை அடுத்து கடந்த அமர்வின்போது வழங்கிய தீர்ப்புக்கு அமைவாக 13 மீனவர்களையும் 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனையுடன், கடற்படையினர் மீது தாக்குதல் நடத்திய விவகாரத்தில் ஆறு குற்றச்சாட்டுகளின் கீழ் தலா இரண்டு மாதம் வீதம் 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 12 மாதம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-100)



## உலருணவுப் பொதிகள் கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேசத்தில் சிலாவத்தை கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு 'பெரண்டினா' நிறுவனத்தால் உலருணவுப் பொதிகள் சிலாவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுx வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ரி-19)

## ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ. 31

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குப் புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அதன்படி, அதன் தலைவராக நீதிபதி டபிள்யூ. எம். என். பி. இத்தவலவும், ஏனைய உறுப்பினர்களாக சேத்திய குணசேகர மற்றும் பேர்னாட் ராஜபக்ச ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-44)



## ஞானச்சுடர் வெளியீடும் உதவிகள் வழங்கலும்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஞானச்சுடர் சஞ்சிகையின் 312 ஆவது இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தொடர்ந்து தரம்9 இல் கல்வி கற்கும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவியொருவருக்கு சைக்கிளொன்றும், பொருளாதார நலிவுற்ற குடும்பமொன்றின் வீடு புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபா நிதியும் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கப்பட்டன. (ரி-66)



## ஆனையிறவு உப்பளத்தில் நடமாடும் மருத்துவமுகாம்

ஆனையிறவு உப்பளத்தில் நடமாடும் மருத்துவ முகாம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க இதனை ஆரம்பித்துவைத்தார். நிகழ்வில் உப்பு உற்பத்தி நிறுவனத்தின் தலைவர், முகாமையாளர், ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## பசுமாடுகள் கடத்தல் வாழ்வாதாரம் பாதிப்பு


### கால்நடை வளர்ப்போர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 31

தீவகம் அல்லைபிட்டியில் அதிகளவில் பசுமாடுகள் இறைச்சிக்காகக் கடத்தப்படுவதால் வாழ்வாதாரத்தை கைவிடும் சூழல் ஏற்பட்டுள்ளதாக தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அல்லைப்பிட்டியில் கடந்த மூன்று வருடத்தில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான கால்நடைகள் திருடப்பட்டன.

தற்போதைய சூழலில் இறைச்சிக்கு ஏற்ற கால்நடைகள் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு தீவகப் பண்ணையாளர்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் சங்கத்தினர் தெரிவித்தனர். (ரி-125)





## ஈழத்துச் சபரிமலை இருமுடி யாத்திரை

யாழ்ப்பாணம், டிசெ. 31

'ஈழத்துச் சபரிமலை' என அழைக்கப்படும் கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மகரஜோதி மண்டல விரதப் பெருவிழாவின் ஐயன் யானை மேல் பவனியும், இருமுடி யாத்திரையும் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றன.

இந்த யாத்திரை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்திலிருந்து ஆரம்பமாகி, யாழ்.நகர் சென்றடைந்து அங்கிருந்து யாழ். இலுப்பையடிச் சந்தியை அடைந்து பலாலி வீதியூடாக ஐயப்பன் ஆலயத்தைச் சென்றடைந்தது. (ச-66)

## பரிசில் நிகழ்வும் நூல் வெளியீடும்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் உள்ளூராட்சி வார, தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வும் பச்சிலை சஞ்சிகை வெளியீடும் கடந்தவாரம் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-75)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19.11.1997

இறைவன் அடியில் 31.12.2019

## அமரர் அமிர்தகுலசிங்கம் நிரோஜன்

**திதி:வளர்பிறை ஷஷ்டி - 16.01.2024**

நான்கு ஆண்டுகள் கடந்து நாட்களும் கடந்தது
நாவினில் உன் பெயரை அழைத்து நிற்கின்றோம்
ஆயினும் உன் பதில் எமக்கு கேட்கவில்லையே மகனே!

எம்மை விட்டுப் பிரிந்து விண்ணுலகம் சென்றுவிட்டாய்
உறவுகளின் அழைப்பினை ஏற்க மறுத்துவிட்டாய்
இது விதியின் சதியென்று புலம்பித் தவிக்கின்றோம்.

மனதினில் ரணங்கள் ஓயாது தவிக்கின்றது மகனே
இவ்வாறு எம்மை கண்ணீர்க் கடலில் தத்தளிக்க வைத்துவிட்டு
நீ மட்டும் எவ்வாறு தனி உலகம் சென்றாய்
மரண ஓலத்தின் சத்தம் இன்றும் எம்மைவிட்டு நீங்கவில்லையடா.
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


கோவில் வாசல்,
இணுவில் மேற்கு,
இணுவில்,
31.12.2023

(CS 27499) A-1

**உனது பிரிவால் வாடும்**
**அப்பா, அம்மா, அக்கா, அண்ணா**
**அத்தான் மற்றும் உறவினர்கள்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1946



இறப்பு 24 . 12 . 2023

## சுப்பையா இராசையா

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். நாரந்தனை மற்றும் யாழ். கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசையா அவர்கள் கடந்த (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களாதேவி, அவர்களின் அன்புக் கணவரும், தயாளரூபன், சதாரூபினி, சற்சொரூபினி, தயாளினி, சத்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சுளா, கருணாகரன், பவநாதன், லிங்கம், சுதேஷ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பராசக்தி, சிவமணி, கிருஷ்ண கோபால் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கவி, கரிஸ்ராஜ், அனுஸ்ராஜ், தனுசிகா, சாருகா, ஜீவிகா, சஜீகரன், தருணிகா, ஆரணிகா, கஜீபவன், சஞ்ஜீபன், சரண்யா, பிரவீன், அஸ்வீன், ஓவியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது மகள் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பவநாதன் சற்சொரூபினி**
**கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 4151 947, 077 1530 763**

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 03 . 1941



மறைவு 25 . 12 . 2023

## கனகசுந்தரம் பரமேஸ்வரி

யாழ்ப்பாணம் , வடமராட்சி, பருத்தித்துறை, தென் புலோலி, உபயகதிர்காமத்தினை பிறப்பிடமாகவும், கனடா மார்க்கத்தை (Markham) வதிவிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் பரமேஸ்வரி அவர்கள் கடந்த (25.12.2023) அன்று கனடாவில் சுகவீனம் காரணமாக இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு சின்னம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற விநாசித்தம்பி பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி கனகசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி (டென்மார்க்), இராஜகுலேந்திரன் (கனடா), இராஜகுமார் (கனடா), இராஜகிருஷ்ணன் ( குட்டி- கனடா ), இராஜவதனி ( கனடா ) ஆகியோரின் அன்புத் தாயாரும், இலங்கநாதன் (டென்மார்க்) , தர்மசுகி (கனடா) கயல்விழி ( கனடா ) , சுமதி ( கனடா ) ரவிச்சந்திரன் ( கனடா ) ஆகியோரின் அன்பு மாமியாரும், விநாயகமூர்த்தி மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும், நாகநாதன் (கனடா), ராமநாதன் (இலங்கை) , சண்முகநாதன் (அமெரிக்கா), விநாயகமூர்த்தி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும்.அனோஜன்-ஜனனி, கஜனி, திவ்யா, டெனிக்கா, லிந்துஜன், அவினிஸ், அஞ்சனா, அஷ்ஷினி, அத்விக், ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், இனியாவின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிமுதல் 9.00 மணிவரை Cremation and Vitnessing என்னும் இடத்தில் நடைபெற்று, 9.00 மணிமுதல் 10.00 மணிவரை தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| இராஜேஸ்வரி | - மகள்- டென்மார்க் | : 004558101420 |
| இராஜகுலேந்திரன் | - மகன் (பெரியப்பன்) | கனடா : 0017803810012 |
| இராஜகுமார் | - மகன் (சின்னப்பன்) | கனடா : 0016477032466 |
| இராஜகிருஷ்ணன் | - மகன் (குட்டியப்பன்) | கனடா : 0014165625121 |
| இராஜவதனி | - மகள் - | கனடா : 00141[illegible] |

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 05 . 1955



இறப்பு 29 . 12 . 2023

## கனகசிங்கம் கிருஸ்ணகுமாரி

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் கிருஷ்ணகுமாரி நேற்றுமுன்தினம் (29.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கம் (சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், முத்துக்கிருஸ்ணன் இராசலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வியும், கந்தையா, கிருஸ்ணவேணி, கிருஸ்ணபவானி, கிருஸ்ணதயானி, கிருஸ்ணராதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஸ்தூரி (ஆசிரியர் - உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை, யூனியன் அசூரன்ஸ் E - Consaltant), முரளீதரன் (அதிபர் - யா/ புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம்), வாசுகி (கால் நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரமணன் (மகா சக்தி புடைவையகம், உரும்பிராய்), பகீரதி (ஆசிரியர் - யா/ முத்துத்தம்பி மகா வித்தியால யம்), கஜேந்திரன் (நில அளவையாளர், பிரதேச நில அளவைத் திணைக்களம், பூநகரி) ஆகியோரின் மாமியாரும், தாரிகா, வைஸ்ணவி, சாய்ஹரிகரன், கரிசநாத், மிதுசன், மதுரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 303 9552, 076 680 4737**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 • 08 • 1950



மறைவு 29 • 12 • 2023

## நமசிவாயம் கமலாதேவி

மட்டுவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் கமலாதேவி நேற்றுமுன்தினம் (29.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி வியாழாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை. சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும். சர்வகலாதேவி (பிரான்ஸ்). கேதீஸ்வரி (ஆசிரியர் - கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். இராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்). சிவனொளிபவன் (சிறைச்சாலை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும். லக்ஷணா தயாபரன். கல்பனா நந்தபூஷன். பிரவீனா. கஜானா. கவியரசன். சிவன்யா. ஹம்சத்வதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். ஆராதனா. அஸ்வின். ஆரனவ். நந்தனா. அஜித்தனா ஆகியோரின் பூட்டியும். காலஞ்சென்ற கதிரவேலு. யோகம்மா மற்றும் கிருஷ்ண பிள்ளை. வன்னியசிங்கம். பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் குமாரவேலு. கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக கிழமை அவரது இல்லத்தில் முற்கல் 10.30 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டுவில் சந்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மட்டுவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**077 325 0088**

# மரண அறிவித்தல்

மலர்வு 25 - 12 - 1942



உதிர்வு 30 - 12 - 2023

## குலசிங்கம் நாகேஸ்வரி

கள்ளித்தெரு. தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும். இல. 49. சிவப்பிரகாசம் வீதி. யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட குலசிங்கம் நாகேஸ்வரி நேற்று (30.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசிங்கத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான E.M பொன்னம்பலம். இராசம்மா தம்பதி யினரின் மூத்த மகளும். காலஞ்சென்றவர்களான குமாரவேலுப் பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியினரின் அருமை மருமகளும். தவக்குமரன் (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி). செல்வக் குமரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சுதேச மருத்துவ திணைக் களம் வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். இராதிகா. தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமி யாரும். ஜலக்ஷனா. பர்வதன். அகர்சியா. அர்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். வைத்தியகலாநிதி நவரட்ணராஜா (அவுஸ் ரேலியா). இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார். உறவி னர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 49, சிவப்பிரகாசம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 617 3035, 021 221 6489, 077 927 4136**

(CS 27132)(K-1)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள CCTV காட்சியறைக்கு கணக்காளர் - பெண் (கணினி அறிவுடையோர் CCTV தொழில்நுட்பவியலாளர் - ஆண்

(பழகவிரும்புபவரும் ஏற்றுக்கொள்ளப்படும்)

வயதெல்லை (20 - 30) தேவை. சுயவிபரக்கோவையை

**071 684 3023 Whatsapp இற்கு** அனுப்பிவைக்கவும்

(cs 53236)(N.I)

## வேலை வாய்ப்பு அறிவித்தல்

**துணை கிளை செயற்பாட்டாளர் (ஆண்)**
**யாழ்ப்பாணக் கிளை**

| | |
|---|---|
| தகைமைகள் | : க.பொ.த உயர்தர சித்தி |
| | : ஆங்கில மொழியில் சிறந்த தொடர்பாடல் திறன் |
| | : Technical Knowledge in machinery or electronics |
| | : சிறந்த கணினி அறிவு |
| | : மோட்டார் சைக்கிள் Licence பெற்றிருத்தல் |
| வயது | : 25க்கு மேற்பட்டவர் |

**உங்களது சுய விபரக் கோவையை 10 நாட்களுக்குள் அனுப்பவும்.**

info@tradefirst.lk

**Trade First Private Limited**
**077 485 0027**

# வேலைவாய்ப்பு

**யாழ்நகரில் அமைந்துள்ள**
**தனியார் நிறுவனத்திற்கு**
**பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

- **கணக்கு இலிகிதர்** (கணக்கியல் துறையில் அனுபவமுடைய 25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)
- **பொதி செய்பவர் / பொதி சுமப்பவர்** (25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)
- **காவலாளி** (25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)

(கீழ் காணும் முகவரிக்கு சுயவிருப்பங்களை அனுப்பிவைக்கவும்

**வ.வ. இராமசாமிப்பிள்ளை**
**இல.58, குறுக்கு வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

## ஆதன பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசபை
உப அலுவலகம். சுன்னாகம்

**வட்டாரம் - 5, மயான வீதி, ஆதன இல - 90**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட **மயான வீதி. சுன்னாகம்** எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் - 05. மயான **வீதி. ஆதன இல.90ல்** சுப்பிரமணியம் சின்னத்தங்கச்சி உரிமைகோருபவர் அசோக்குமார் பகீரதி எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு காசிநாதர் சின்னத்தம்பர் செல்லப்பா முத்துக்குமாரு முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்ட வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை. வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு. J/200 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"சேதுவத்தையும் கல்லோடையும்"** எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 01 உடைய ஆதனமானது 1998.10.30 ஆம் திகதிய 4440 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **செல்வி. கிருஸ்ணவேணி சந்திரலிங்கம்** அவர்கள் மூலம் 2011.11.22 ஆம் திகதிய 521 ஆம் இலக்க **நன்கொடை உறுதியால். கந்தரோடை மேற்கு. சுன்னாகம்** என்னும் இடத்தை **சேர்ந்த அசோக்குமார் பெண் பகீரதி** (647334555V) எனும் பெயரிற்குப் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.**சிற்றம்பலம்** அவர்களால் 2023.10.15 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 5598 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 00 குளி 15.74 ஆகும்.

அதன் எல்லைகளாக

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | ஒழுங்கை |
| வடக்கு | - | தம்பித்துரை கைம்பெண் பூமணியின் ஆதனம் |
| மேற்கு | - | தம்பித்துரை தர்மலிங்கம் பெண் கணேஸ்வரியின் ஆதனம் |
| தெற்கு | - | ஒழுங்கை |

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருத்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது **அசோக்குமார் பெண் பகீர்தி** எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**


# திணைக்களங்களுக்கு பட்ஜெட் கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 31

2023 நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் அங்கீ கரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் யாவும் உரிய திணைக்களங்களுக்குச் செலுத்தப்பட்டு விட்டது என்று திறைசேரி அறிவித்துள் ளது. கடந்த 25 ஆண்டு காலப்பகுதியில் இந்த ஆண்டே வரவு - செலவுத்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் யாவும் முழுமையாகச் செலுத்தப்பட்டுள் ளன. (ச-6)

# வடக்கில் மழை!

கொழும்பு, டிசெ. 31

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொல நறுவை, மாத்தளை, நுவரெலியா மற்றும் அம் பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத் துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:- வடமாகாணத்திலும் அநுராதபுரம் மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிக ளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய் யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்குச் சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் அவ்வப் போது மணித்தியாலத்துக்கு 30–40 கிலோமீற் றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழையின்போது தற்கா லிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக் கங்களினால் ஏற்படக் கூடிய அபாயங்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறி வுறுத்தப்படுகின்றனர் – என்றுள்ளது. (ம)



கோப்பாய்ப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா அண்மையில் கோப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி சுபா ஜினி மதியழகன் தலைமையில் இடம்பெற் றது. நிகழ்வில் அருட்தந்தை சா.ம.செல்வரட்ணம் விருந்தினராகக் கலந் துகொண்டார். நிகழ்வில் கரோல் கீதங்கள் மற்றும் நடன நிகழ்வுகள், பரிசில்கள் வழங் கல் என்பன இடம்பெற்றன. (ச-66)


## வீடு வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். குறுகிய கால அடிப்படையில் தளபாட வசதிகளுடன் மாணவர்கள் / தொழில் புரி- பவர்கள் குழுவாக தங்குவதற்கு மட்டும் வழங்கப்படும்.

**074 072 9161 / 075 979 9161**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 வீத இலங்கையரிடமே 31 வீதமான சொத்துகள்!

## இலங்கையில் சொத்துகளில் நீடிக்கின்றது சமத்துவமின்மை

கொழும்பு, டிசெ. 31

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் சொத்துகளின் பங்கீட்டில் சமத்துவமின்மை நிலவும் முதல் 5 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தால் வெளியிடப்பட்டிருக்கும் 'எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பல்: ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் மனிதவள அபிவிருத்திக்கான புதிய வழிமுறைகள்' எனும் மகுடத்திலான 2024ஆம் ஆண்டுக்கான பிராந்திய அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் சொத்துகளின் பங்கீட்டில் சமத்துவமின்மை நிலவும் முதல் 5 நாடுகளின் பட்டியலில் இலங்கை, தாய்லாந்து, சீனா, மியன்மார் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்ளன. அதேபோன்று வருமானப் பங்கீட்டிலும் இலங்கை சமத்துவமற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

உயர்மட்டத்திலுள்ள ஒருசதவீதமான இலங்கையர்கள் தனிப்பட்ட மொத்தச் சொத்துகளில் 31 சதவீதமானவற்றைத் தம்வசம் வைத்திருப்பதுடன், கீழ்மட்டத்திலுள்ள 50 சதவீதமானோருக்கு நாட்டின் மொத்த சொத்துகளில் வெறுமனே 4 சதவீதத்தை விடவும் குறைந்த அளவிலான சொத்துகள் மாத்திரமே பகிரப்பட்டுள்ளன. சமூகத்தின் 10 சதவீத செல்வந்த வர்க்கத்தினர் மொத்தச் சொத்துகளில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவற்றைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ-இ)


## உரிமையாளர் மாற்றம்

கோண்டாவில் ஸ்ரேசனடி இரண்டாம் (2)
இலக்க கடையில் இயங்கிய உரிமையாளர்
**நல்லையா உதயகுமார்**
[பெரியதம்பி]




ஆட்டிறைச்சி கடை கொக்குவில்
குளப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சி
கடைக்கு மாற்றப்பட்டுள்ளது
என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்

**ஆரம்பம்: 01.01.2024**

தொ.பே.: 077 085 6479


## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 03 - 1936



இறப்பு 29 - 12 - 2023

### முருகேசு கந்தசாமி

ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி அவர்கள் கடந்த (29.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஒட்டுவெளி மிருசுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி முருகேசு, பூங்காவனம் தம்பதியினரின் மூத்த புதல்வனும் பாலாவி தெற்கைச் சேர்ந்த மாப்பானபிள்ளை செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குலேந்திரராசா, குலேந்திரமலர் (இத்தாலி), காலஞ்சென்ற குலேந்திரராணி, குலேந்திரவதனி, காலஞ்சென்ற குலேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தயாநிதி, கனகேஸ்வரன் (இத்தாலி) வசந்தரூபன் ஆகியோரின் மாமனாரும், விதுசன், நிதுசன், அனுசன், அட்சயனா, டனுசன், தேனுஷா (இத்தாலி) பானுசன் (இத்தாலி), கவீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக படித்த மகளிர் குடியேற்றத்திட்ட மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒட்டுவெளி, மிருசுவில். (CR 41421)(K-1)

தகவல்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. கு.தவக்குமரன்
அவர்களின் பாசமிகு தாயார்

**குலசிங்கம் நாகேஸ்வரி**

அவர்கள் 30.12.2023 சனிக்கிழமை இறைபதம் அடைந்தமையிட்டு பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 25.12.1942 மறைவு 30.12.2023

ஆசிரியர் கழகம்
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்

தேற்றாம் 15 . 01 . 1948



மறைவு 30 . 12 . 2023

### திருமதி சத்தியபாமா ஐயாத்துரை

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா ஐயாத்துரை நேற்று (30.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் பாசமிகு மனைவியும், மல்லிகாதேவி, காலஞ்சென்ற சந்திரபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31..12.2023) ஞாயிற்றுக்கிழமை அராலி மத்தி வட்டுக்கோட்டையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு அரலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தொடர்பு: 076 932 4708
077 237 8047

தகவல்:
குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.07.1937 மறைவு 31.12.2013

**அமரர் இராசாத்தி பரமநாதன்**
மாவிட்டபுரம் (கனடா)

எம் இதயங்களில் ஒளி வீசிய பூரண நிலவே!
எம் கண்களில் நீர் வரவழைத்தே மறைந்ததேனோ எம் அருமை தாயே!
வாழ்வே மாயமென்று எமக்கு உணர்த்திவிட்டு சென்றனையோ!
பூரண வாழ்வை வாழ்ந்து களித்து விட்டேன் என்று
பூரண நிம்மதியுடன் எம்மைத் தவிக்க விட்டுச் சென்றனையோ!
நல்ல மனைவியாய், பாசமிகு தாயாய்! ஆசை மாமியாய்!
பிரியமிகு பாட்டியாய்! அன்புச் சகோதரியாய்! குடும்ப ஒளிவிளக்காய்!
பண்பிற்கோர் இலக்கணமாய்! ஊர் போற்ற வாழ்ந்த உத்தமியே!
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த எம் அருமை தெய்வத்திற்கு
எமது அஞ்சலிகள்.

குடும்பத்தினர்

27519) A-1

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம்

எதிர்வரும் 07.01.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் விசேட பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இணைச் செயலாளர்

(CS 53343) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி (இன்று) மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**



ஏழரை ஆரம்பம்

எல்லோரையும் எளிதில் நம்பிச் செயல்படும் தன்மை கொண்ட மீன ராசி அன்பர்களே...

இதுவரை உங்கள் ராசிக்கு 11 ம் வீட்டில் அமர்ந்து பலவித நன்மைகளைக் கொடுத்துக் கொண்டிருந்த சனிபகவான் தற்போது 12 ம் இடமான விரைய ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கிறார். ஏழரைச் சனி டிசெம்பர் 20 முதல் ஆரம்பமாகிறது. அடடா, ஏழரைச் சனி இனி என்ன ஆகுமோ என்ற கவலையை முதலில் விட்டுவிடுங்கள்.

ஏழரைச்சனியாக இருந்தாலும் சனிபகவான் மீனராசிக்கு நல்ல பலன்களையே தருவார். ராசிக்கு 12 ம் இடம் என்பது மறைவு ஸ்தானம். அதில் சனி பகவான் மறைவது நன்மையையே கொடுக்கும். இதனால் தடைப்பட்டு பல முக்கியமான காரியங்கள் இனிதே நிறைவேறும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பல பிரச்னைகளைப் பேசியே தீர்த்துவிடுவீர்கள். குடும்பத்துக்குள் . கணவன் - மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் தீரும். மனம் விட்டுப் பேசி பிரச்னைகளைச் சரி செய்வீர்கள்.

திருமணம், சீமந்தம், காதுகுத்தி போன்ற சுபச் செலவுகள் அதிகரிக்கும். குருபகவானை ராசிநாதனாகக் கொண்ட உங்களுக்கு சனிபகவான் மிக நல்ல பலன்களையே கொடுப்பார். ஆதரவின்றி இருப்ப வர்களுக்கு உங்களால் முடிந்த அளவு உதவுங்கள்.

**சனிபகவானின் பார்வைப் பலன்கள்**

சனிபகவான் 2, 6, 9 ஆகிய வீடுகளைப் பார்ப்பதால் வாழ்வில் பல நல்ல மாற்றங்கள் உண்டாகும். சனிபகவான் உங்களின் 2ம் வீடான தன குடும்ப லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் சேமிக்க முடியாதபடி செலவுகள் இருந்தாலும் சமாளிப்பீர்கள். சிலர் கடன் வாங்கவும் நேரும். கொடுத்த வாக்கை காப்பற்றச் சிறிது போராட வேண்டியது இருக்கும். வாக்குஸ்தானத்தை சனி பார்ப்பதால் பேச்சால் பிரச்சினை வரலாம். தாய்வழியில் சொத்து வந்து சேரும். நட்பு வட்டம் விரியும். மறைமுக எதிரிகளை இனங்கண்டறி வீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தடைப்பட்ட குலதெய்வ பிராத்தனையைத் தொடர்வீர்கள். வாகனம் பழுதாகி சரியாகும்.

சனிபகவான் உங்களின் 9 ம் வீடான லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். முடிந்த அளவு அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள்.

**வியாபாரம்:** முதலீடுகளில் கவனம் தேவை. அனுபவம் இல்லாத தொழிலில் கால் வைக்க வேண்டாம். புதிய சலுகைகளை அறிவித்து வாடிக்கையாளர்களைக் கவர்வீர்கள். போட்டியாளர்களே வியக்கும் அளவுக்கு லாபம் அதிகரிக்கும். நல்ல பணியாளர்கள் கிடைப்பார்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடன் அவ்வப்போது மோதல்கள் வரும்.

**உத்தியோகம்:** பணியிடத்தில் கம்பீரமாக இருப்பீர்கள். உங்களுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் விலகிப் போவார்கள். வெற்றிகள் குவியும். மூத்த அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பணிச்சுமை அதிகமாகத்தான் இருக்கும். சக ஊழியர்களுடன் சலசலப்பு வேண்டாமே. தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றுபவர்களுக்குப் பதவியுயர்வு, சம்பள உயர்வு தடைபட்டாலும் போராடி பெறுவார்கள்.

**மொத்தத்தில் இந்த சனிப் பெயர்ச்சி பழைய பிரச்சினைகளிலிருந்து விடுபட வைப்பதாகவும், அலைச்சலுடனும் பணிச்சுமையுடனும் நல்ல ஆதாயத்தைப் பெற வைப்பதாகவும் அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.



**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும்.சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்து கொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.



**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.



**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.



**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.



**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.



**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.



**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.



**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.



**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.



**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புடன் மூவர் கைது

பருத்தித்துறை, டிசெ. 31

வடமராட்சி, துன்னாலை மற்றும் கோண்டாவில் பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட சோதனைகளில் 15 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 20 வயது இளைஞன் உட்பட இரண்டு பெண்கள் கைதாகியுள்ளனர். ஒரு பெண் தப்பிச் சென்றுள்ளார்.

துன்னாலை - கருக்குட்டுவானில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றனர். பொலிஸாருக்கும் சந்தேக நபர்களுக்கும் இடையில் இழுபறி ஏற்பட பெண் ஒருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏழரை லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை- கோப்பாய் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் லக்சானுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, கோண்டாவிலில் ஏழரை லீற்றர் கசிப்புடன் 20 வயதுடைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான். அவன் சூட்சுமமான முறையில் புத்தகப் பையினுள் நான்கு போத்தல்களில் கசிப்பை வைத்திருந்தான் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (அ-ஒ-23-100)

# தம்மிக்க உறுதி!



கொழும்பு, டிசெ. 31

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக பொதுஜனபெரமுனதன்னிடம்10நிபந்தனைகளை முன்வைத்துள்ளது எனவும், அவற்றைத் தான் நிறைவேற்றி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேலைகளை முன்னெடுத்துவருகின்றேன். பொதுஜன பெரமுனக் கட்சி சார்பில் களமிறங்கவேண்டுமெனில் 10 நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

10 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், அரச வளங்களை விற்பனை செய்யக்கூடாது, வற்வரியை குறைக்கவேண்டும் என்பன உள்ளிட்ட 10 நிபந்தனைகளே இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை நான் நிறைவேற்றிய பின்னர் மொட்டுத் தரப்பில் இருந்து அறிவிப்பு வெளியாகும். இந்த நாட்டை மீட்கமுடியும். நான் எவர் மீதும் விமர்சனங்களை முன்வைக்கவில்லை. வேலைத்திட்டத்துடனேயே செயற்பட்டுவருகின்றேன்- என்றார். (அ-ஒ-44)

# இளம்பெண் உயிரிழப்பு

## உறவினர் முறையிலான இளைஞன் தவறான முடிவு எடுக்க முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 31

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் 19 வயதான இளம்பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இதனைக் கேள்வியுற்ற இளைஞர் ஒருவர் தானும் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முயற்சித்த நிலையில், காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். காதலர்களான இருவரிடையேயும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது என விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-23-100)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 31

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேக வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ரி-66)


# வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கின்றன.

(1). வரவேற்பாளர் (Receptionist) பகல்/ இரவு
(2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Marketing Staff)
(3). பண வசூலிப்பாளர் (Cash Collector)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் இலக்கத்திற்கு உங்களது சுயவிபரக்கோவையை அனுப்பிவைக்கவும்.

E-mail : advt@uthayan.com
077 120 9996


# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 11 . 1931



மறைவு 30 . 12 . 2023

## கந்தவனம் சின்னாச்சிப்பிள்ளை (உத்திரம்)

வீரபத்திர கோவிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னாச்சிப்பிள்ளை கந்தவனம் அவர்கள் நேற்று (30.12.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சின்னப்பு கந்தவனம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான யோகம்மா, நடராசா மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, ஆறுமுகசாமி, சத்தியவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரங்கநாதன், குணசுலோசனா, அமரர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அமரர்களான கந்தவனம், சிவபாக்கியம், சிவகுலம் ஆகியோரின் மைத்துனியும், நளினி - ஜெயசங்கர், றஜினி - ராஜகருணைநாதன், சாமினி - சாந்தன், வரலக்சுமி - சுதர்சன், நிரோஜினி - தவபாலன், திவ்வியா - கிரிசங்கர், யுகந்தன், ஜிந்துஜன், கஜந்தினி - மகிந்தன், கஜாகரன், டிலானி ஆகியோரின் பேர்த்தியும், அனுஷாந், தெரிசியா, றணோஸ், ஜெனிக்கா, ஹரிஷன், யசிக்கா, அபிசினி, ஹரினி, அபிஷேக், கிருஷ்மன், திவக்ஷன், அபர்ணா, சஸ்மிதா, தேஜஷ், அம்றிதா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P:021 224 2702

(CS 27505) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 04 . 1943



மறைவு 30 . 12 . 2023

## சந்தனம் சின்னையா

கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்தனம் சின்னையா நேற்று (30.12.2023) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், குணராசா, ரவீந்திரராசா, தேவராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஜனி, நளினி, விஜிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சுஜந்தினி, சிந்துஜா, மதிவதனன் (ஜேர்மன்), சுஜந்தன், தர்சுஜன், வேணுஜன், மேனன் (லண்டன்), தேனுஜா, கீர்த்தனன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நாவலடி லேன், கோப்பாய் தெற்கு.
077 1606 572
077 2168 213

தகவல்: பிள்ளைகள்

(CS 27524) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம்குடும்பப் பெண் நெஞ்சுவலியால் சாவு!

கொடிகாமம், டிசெ. 31

குழந்தையைப் பிரசவித்து 45 நாள்களான இளம் குடும்பப்பெண் ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம், ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த க. தனுஜா (வயது -33) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவருக்குத் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது இறந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து தென்மராட்சிப் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.சி. இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டு, யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-159)

## பேஸ்புக் பதிவால் ஊடகர் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு மாகாண ஆளுநர் தொடர்பில், தனது பேஸ்புக்கில் பதிவிட்ட ஊடகவியலாளர் ஒருவரிடம் பொலிஸார் நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் வர்ணன் தனது முகநூலில், கிழக்கு ஆளுநரின் 24 மணித்தியால பொது மக்கள் சேவை வடக்கில் இடம்பெறுவதில்லை என்று பதிவிட்டிருந்தார்.

இது தொடர்பில் வட மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபன் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் நேற்றுச் சனிக்கிழமை ஊடகவியலாளரிடம் வாக்குமூலத்தை பதிவு செய்தனர். (அ-ஒ-27)

## கட்டைக்காடு - கேவில் மீனவர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

இரண்டு படகுகள் மற்றும் இலட்சக்கணக்கான பெறுமதியுடைய மீன்பிடி உபகரணங்கள் இனம் தெரியாதோரால் தீ வைத்து எரித்தழிக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கேவில் மீனவர்கள் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தீர்மானத்தை மீறி இறால் கூடுகளை வைத்து தொழிலில் ஈடுபட்ட பலரின் உபகரணங்கள் சங்கத்தால் கைப்பற்றப்பட்டிருந்தது. இந் நிலையில், இனம் தெரியாதவர்களால் சங்க நிர்வாகத்தினருடையதும் மீன்பிடி உபகரணங்களைத் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

நாசகாரவேலையில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும், பாதிக்கப்பட்ட மீனவர்களது வாழ்வாதாரம் மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரி அப்பகுதி மீனவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ-ஒ-100)

### பொலிஸார்...

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் தப்பிக்க நினைத்தால் தேவை ஏற்படின் சுட்டும் அவர்களைக் கைது செய்வோம் என காங்கேசன்துறைபிராந்தியம் இரண்டுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இலங்கைக்கோன் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பகுதி வர்த்தகர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்றுச்சனிக்கிழமை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருங்குற்றச்செயல்களில் ஈடுபட்டுவந்த நபர் ஒருவர் அண்மையில் அல்வாய் பகுதியில் வைத்து சுட்டுக் கைது செய்யப்பட்டு இருந்தார். அவரைக் கைது செய்யும் வரை எனக்கு இரவில் நித்திரை கொள்வதற்குக்கூட நேரம் இருக்கவில்லை.

பொலிஸாரிடம் தெரிவிக்கும் தகவல்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களிடம் செல்வதாக பொதுமக்கள் கருதுகின்றனர். அப்படிச் சந்தேகம் ஏற்படின் 071 859 8835 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டால் நீங்கள் தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கத்தில் எண் எமது தொலைபேசியில் கிடைக்கப்பெறாது. எனவே நீங்கள் இந்தத் தொலைபேசி வழியாகத் தகவல்களைத் தெரிவிக்கலாம்.

தற்போது குற்றச்செயல்கள், போதைப்பொருள் விற்பனை என்பன தொடர்பாக சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். சிலர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து கொண்டே குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

சிலர் போதைப்பொருள் கடத்தலுக்காக கடலுக்குச் செல்லும்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் தப்பிச் சென்றுள்ளனர். அவ்வாறு தப்பித்துச் சென்றவர்கள் தலைமறைவாக இருக்கின்ற நிலையில் அவரது உறவினர்கள் அவர் காணாமல் போய் விட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். ஆனால், அவர்களின் நடமாட்டம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துள்ளனர். குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தப்பிக்க நினைத்தால் தேவை ஏற்படின் சுட்டுக் கைது செய்வோம் - என்றார். (அ-ஒ-100)

### குடாநாட்டில்...

யாழ்ப்பாணத்தில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மணல் அகழ்வுகளை பிரதேச செயலரின் அனுமதியுடன் மேற்கொண்டு வருகின்றது.

அகழப்படும் மணல் யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தால் குடாநாட்டில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் தற்போது பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தின் பதிவு அல்லாத 5 வாகனங்களில் மணல் ஏற்றப்பட்டு குடாநாட்டில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகக்குற்றம்சுமத்தப்படுகின்றது.

இது தொடர்பில் மருதங்கேணி பிரதேச செயலரை 'உதயன்' தொடர்புகொண்டு கேட்டபோது; பாரவூர்திச் சங்கம் மாத்திரமே குடாநாட்டில் விநியோகம் மேற்கொள்கின்றது. மாவட்டச் செயலகத்தின் நிர்ணய விலையைவிட அதிக விலையில் விற்பனை செய்வது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கவில்லை எனவும், இது தொடர்பில் ஆராய்வதாகவும் பதிலளித்தார். (அ-ஒ-5-125)

### சி.ஐ.டி. என்று...

வவுனியா, தாண்டிக்குளம் பேருந்து தரிப்பிடத்தில் நேற்றுமுன்தினம் நின்ற மூவர் அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனை மறித்து தாம் சி.ஐ.டி. எனக் கூறி, தம்மை தாண்டிக்குளம் குளக்கட்டில் இறக்கிவிடுமாறு கேட்டுள்ளனர். இளைஞன் அவர்களை ஏற்றிக் கொண்டு தாண்டிக்குளம் குளக்கட்டால் சென்றபோது இளைஞனிடமிருந்த கைத்தொலைபேசியைப் பறித்து கொண்டு அந்த மூவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

சிறிதுநேரம் கழித்து அதே மூவரும் மடுகந்தவீதியால் சென்ற பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இரு சம்பவங்கள் தொடர்பிலும் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து திருடப்பட்ட சங்கிலி மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது வவுனியாவில் திருடப்பட்ட 2 மோட்டார் சைக்கிள்கள், கிளிநொச்சியில் திருடப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிள், மடிக்கணினி, கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டன.

மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த 23 மற்றும் 28 வயதுடைய இரு இளைஞர்களும், கிளிநொச்சியைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-18-110)

### தமிழ்க்...

தலைவர் சஜித் பிரேமதாஸ தனிப்பட்ட ரீதியில் பேச்சுகளை ஆரம்பித்துள்ளார். விரைவில் உத்தியோகபூர்வமாக பேச்சு நடத்துவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணி, ஜனாதிபதித் தேர்தல் என்பன தொடர்பில் 'உதயனுக்குத்' தொலைபேசி ஊடாக வழங்கிய குறுகிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'ஐக்கியமக்கள்சக்திதலைமையில்அமையவுள்ள அரசியல் கூட்டணி ஜனவரி மாதத்துக்குள் மலரும். வடக்கு - கிழக்கில் இருந்தும் எமக்கு முழுமையான ஆதரவு கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம். தேசிய மட்டத்திலான தேர்தலின் போது வடக்கு - கிழக்கு மக்கள் எம்முடன் பயணிப்பார்கள். கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான பேச்சுகளை கட்சித் தலைவர் ஆரம்பித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இன்னும் அதிகாரபூர்வமாகப் பேச்சு ஆரம்பிக்கப்படவில்லை. தனிப்பட்ட ரீதியிலான சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. கூட்டமைப்புடன் அதிகாரபூர்வமாக எதிர்க்கட்சித் தலைவர் பேச்சு நடத்துவார்' - என்றார். (அ-ஒ-44)

### ஆணைக்குழுக்கள்...

'சர்வதேச நீதிக்காகப் போராடி வரும் நாம் பல வருடங்கள் கடந்தும் நீதி மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஏமாற்றத்துக்குள்ளாகி வருகின்றோம். இலங்கை அரசின் ஆணைக்குழுக்கள் மீதும் அதன் விசாரணைகள் மீதும் நாம் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளோம். 12 ஆணைக்குழுக்களுக்கு மேல் அமைத்து விட்டார்கள். அனைத்துமே ஏமாற்று நாடகம். எனவே பிறக்கின்ற புதிய வருடத்திலாவது எமக்கான நீதியை வழங்குவதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்' என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ-ஒ-18)

### லொறி...

அளவில் ஏ - 9 பிரதான வீதியில் பளை, இந்திராபுரம் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி மோதியதெனவும் லொறிச் சில்லு ஏறியதில் உடல் நசிந்ததால் உயிரிழந்தவரை உடனடியாக அடையாளம் காண முடியவில்லை என பளைப் பொலிஸார் கூறினர். (அ-ஒ-9)

### சிறுமி...

18 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமி 4 மாதங்களுக்கு மேலாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-26-23)

### காரைநகரில்...

பெற்றுள்ளது. வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள், அங்கிருந்த 3 பெண்களைக் கட்டிவைத்துவிட்டு, வீட்டைச் சல்லடையிட்டுத் தேடுதல் நடத்தி பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர்.

15 பவுண் நகைகள் மற்றும் 60 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-26-125)

### வீடு புகுந்து...

உள்ளிறங்கிய திருடன் பெறுமதி வாய்ந்த கைபேசியை திருடிச்சென்றுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

பாவித்த L.G. குளிர்சாதனபெட்டி, செப்பு கிடாரம், உடல் பயிற்சி உபகரணங்கள் HERO சைக்கிள் (ஆண்) அங்கவீனர்பாவிக்கும் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் (HONDA) என்பன விற்பனைக்குண்டு.

**077 247 4740**

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL Literature 2024 & 25, AL
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A **077 766 8725**

## செடி முருங்கை கன்று விற்பனைக்கு

PKM -1 தரமுடைய செடி முருங்கை கன்று விற்பனைக்குண்டு. 5 மாதத்தில் பலன் தரக்கூடியது முன்பதிவுகளுக்கு

**077 370 7864**

## விற்பனைக்கு

- நிலாவரைக்கு அண்மையில் நவக்கிரி புத்தூர் வீதியோரமாக 46 பரப்புத் தோட்டக்காணியும்.
- நாவலர் வீதியையும், கச்சேரி நல்லூர் வீதியையும் முகப்பாகக் கொண்ட 3 3/4 பரப்புக் காணி விற்பனைகு உண்டு.

Contact Number: +94 77 221 6683
Divakar thavavinayagan

## மணமகள் தேவை

1992 ஆம் ஆண்டு பிறந்த (V) கார்த்திகை 4 பாதம் 7 இல் செவ்வாய்/ கேது 23 கிருகபாவம் உடைய பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: **077 044 3589**

## வேலைவாய்ப்பு

யாழ்நகரில் உள்ள பிரபல கவரிங் நகை நிலையத்திற்கு உதவியாளர் தேவை.

தொடர்பு: **077 351 5980**
**077 563 2734**

## வேலையாட்கள் தேவை

**கிளிநொச்சியில் இயங்கும் திருமணமண்டபம்** ஒன்றிற்கு கணினி அறிவுள்ள கிளிநொச்சியை வதிவிட மாகக் கொண்ட **வரவேற்பாளர் (பெண்)**, Development and Marketing **முகாமையாளர் (ஆண்)** தேவை.

(whatsapp) **076 197 8406**

## காணி விற்பனைக்கு

கல்கிசை காலி வீதிக்கு அருகில் 8.26 பேர்ச்சஸ் காணி வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது.
இல.33.பிரிவெனா வீதி, கல்கிசை.(பார்க் சாலைக்கு சந்திப்பில் பிம்சவியா தலைப்புடன்)
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
இடைத்தரகர் இல்லை.
வணிக அல்லது குடியிருப்புக்கு ஏற்றது.
தொடர்புகளுக்கு: **ஜேம்சன்**

**+9476 634 4965**

## றோயல் அக்கடமி
## ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர் | அரசடி றோட், யாழ்நகர்

### புதிய கல்வியாண்டு -2024

தரம் 6
தமிழ்மொழி மூலம்
English Medium

ஆரம்பம் 01.01.2024 திங்கட்கிழமை

* கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம் ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரிய வாய்ப்பு!

யாழ் றோயல் காலை 7 மணி
நல்லூர் றோயல் காலை 9.30 மணி

குறிப்பு: * மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்.
* ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.
— இயக்குநர்


## மணமகன் தேவை

01. உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1981, மிருகசீரிடம், BSc, Singapore Citizen Divorce மணமகளுக்கு மணமகன் தேவை.
02. மீசாலை, இந்து, கௌரவகுலம் (V), 1993, சதயம், 5' 10" உயரம், MBBS Doctor மணமகளுக்கு மணமகன் தேவை.
03. புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம் (V), 1989, புனர்பூசம், Masters in Phycology, Norway Citizen Fair, Slim, மணமகளுக்கு மணமகன் தேவை.
04. நயினாதீவு - காரைநகர், இந்து, கௌரவகுலம். (V), 1996, பூராடம், MD, Doctor, USA மணமகளுக்கு மணமகன் தேவை.
05. வட்டுக்கோட்டை, இந்து, கௌரவகுலம், (V), 1990, ரேவதி , Masters Degree, UK, அழகான மணமகளுக்கு மணமகன் தேவை.
06. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம், (V), 1982, மிருகசீரிடம், MSc, Associate Director, Divorce UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
07. பருத்தித்துறை - சண்டிலிப்பாய் இந்து, கௌரவகுலம் (V), 1991, பூசம், BSc UK, CIMA UK Accountant, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
08. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1995, ஆயிலியம், Masters of Pharmacy (UK Univercity), Danmark இல் பிறந்த UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
09. அச்சுவேலி, இந்து, கௌரவகுலம் (V), 1992, ரேவதி, Graduate, Accountant, UK மணமகளுக்கு மணமகன் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

# காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோவிலில் இருந்து 200m இல் 2, 2 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
காணி நன்னீரூற்றுக் கொண்ட குடியிருப்புப் பிரதேசம்




| Lot No. | Varagu Culture(VC) | | Acres | Roods | Perches | Sq.m |
|---|---|---|---|---|---|---|
| | Lms | Kulies | | | | |
| 1 | 02 | 0.00 | 0 | 0 | 20.33 | 514.2852 |
| 2 | 01 | 13.50 | 0 | 0 | 17.79 | 449.9996 |
| 3 | 02 | 3.91 | 0 | 0 | 22.54 | 570.1033 |
| 4 | 02 | 11.01 | 0 | 0 | 26.55 | 671.6090 |
| 5 | 02 | 10.61 | 0 | 0 | 26.33 | 665.8838 |
| 6 | 02 | 2.00 | 0 | 0 | 21.46 | 542.8566 |
| 7 | 02 | 2.00 | 0 | 0 | 21.46 | 542.8566 |
| 8 | 02 | 2.00 | 0 | 0 | 21.46 | 542.8566 |
| 9 | 01 | 10.91 | 0 | 0 | 16.33 | 413.0427 |
| Total | 19 | 1.94 | 1 | 0 | 34.25 | 4913.4934 |

**தொடர்புகளுக்கு : 077 077 3052, 076 430 8648, 074 375 5446**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> சிலுவைகளை நீ சுமந்து
> மாலைகள் எமக்கு சூட்டினாய்
> சிறகடிக்கும் பறவைக்கெல்லாம்
> வானத்தை போல மாறினாய்
>
> விழியோடு நீ குடையாவதால்
> விழிகள் நனைவதில்லை
> நெஞ்சில் பூமழை
>
> பா.விஜய்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி 15 ஞாயிற்றுக்கிழமை (31.12.2023) சிகரம் : 180

# 2024 வெற்றி ஆண்டா? தோல்வி ஆண்டா ?

○ நிலாந்தன்

கடந்த 24ஆம் திகதி இரவு பதினொரு மணிக்கு அதாவது நத்தார் பிறப்புக்கு முன், மட்டக்களப்பில் ஒரு சோகமான சம்பவம் இடம்பெற்றது. 42 வயதான ஒரு குடும்பஸ்தர் கல்லடிப் பாலத்தில் இருந்து வாவிக்குள் குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் நீரில் மூழ்கத் தொடங்கியதும் சாகப் பயந்து பாலத்தின் தூண் ஒன்றைப் பிடித்துக்கொண்டு தத்தளித்திருக்கிறார். படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். அவரை தற்கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கைது செய்திருக்கிறது. அவர் ஒரு ஏழை மேசன். ஐந்து பிள்ளைகளின் தந்தை. கட்டடப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அவருக்கு தொழில் இல்லை. நத்தார் சீசனை முன்னிட்டு ஆடைகள் வாங்கக் காசு இல்லை. வீட்டில் மனைவி நச்சரித்திருக்கிறார்.

எனவே, வாழ்க்கை வெறுத்துப்போன அந்தக்குடும்பத் தலைவர். இயேசு நாதர் பிறந்த நாள் எனது இறந்த நாளாக அமையட்டும் என்று கூறி பாலத்தில் இருந்து குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார். இயேசு பிறப்பை தனது இறப்பாக அறிவிக்கும் அளவுக்கு ஒரு ஏழை கிறிஸ்தவரை வறுமை தாக்கியிருக்கிறது. இதுதான் நாட்டில் ஆண்டிறுதி நிலைவரம்.

நாட்டில் நத்தார்மரத்தின் விலையை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடலாம். டிசெம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றரை அடி உயரமான ஒரு நத்தார் மரம் கிட்டத்தட்ட 3500 ரூபாவுக்கு விற்கப்பட்டது. எனினும் ஒரு கிழமைக்குப் பின் சுமார் 4 அடி உயரமான நத்தார் மரம் 6000 ரூபாவுக்கு வந்தது. ஆனால் முட்டை விலை குறையவில்லை. கூடியது. ஒரு முட்டை 60ரூபா. இம்முறை பெரும்பாலான எழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸ்தான்.

முட்டை விலை மட்டுமல்ல பச்சை மிளகாய், தக்காளி உள்ளிட்ட அனைத்து மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்து விட்டன. வழமையாக கிறிஸ்மஸ் சீசனில் மரக்கறி விலைகள் உயர்வதுண்டு. தைப்பிறப்போடு குறைவதுண்டு. ஆனாலும் இம்முறை விலை உயர்வு அசாதாரணமாகக் காணப்பட்டது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 1400 ரூபாவிலிருந்து 2000 ரூபா வரை போனது. வெங்காயம் தக்காளியின் விலைகளும் அதிகம். சிங்கள 'யூ டியூப்பர்'கள் மரக்கறி விலை உயர்வைக் காட்ட சில வேடிக்கையான காணொலிகளை வெளியிட்டார்கள். அதில் ஒரு காணொளியில் ஒரு பச்சை மிளகாயை நூலில் கட்டி கறிக்குள் போடுகிறார்கள். கறி காய்ச்சியதும் அதை எடுத்து மற்றொரு கறிக்குள் போடுகிறார்கள். வேறு ஒரு காணொலியில் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் ஒரு தக்காளிப் பழம் மட்டும். அதாவது ஒரு தக்காளி பழத்தின் பெறுமதிதான் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் என்று பொருள். இப்படித்தான் இம்முறை நாட்டில் ஆண்டிறுதி அமைந்தது.

இந்த லட்சணத்தில் அடுத்த ஆண்டு நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் எச்சரிக்கிறார்கள். நெற்பயிர்களைத் தாக்கும் வெள்ளைத் தத்தியை அழிப்பதற்கு விவசாயத்திணைக்களம் முயற்சிக்கவில்லை என்றும் அதனால் விளைச்சல் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதாவது பழைய ஆண்டு நல்ல செய்திகளோடு முடியவில்லை. புதிய ஆண்டும் நல்ல செய்திகளோடு பிறக்கவில்லை என்று பொருள்.

புதிய ஆண்டில், அரசாங்கம் வற் வரியை அதிகரிக்க உள்ளது. இருபது ஆண்டுகளில், ஆகப்பெரிய வரி அதிகரிப்பு இது. புதிய ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும். அவ்வாறு பதிவு செய்யாதிருப்பது 50,000 ரூபாவுக்குக் கூடாத அபராதத்தை விதிக்கக்கூடிய தண்டனைக்குரிய குற்றம் என்று ஒரு செய்தி சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பரவி வருகிறது. புதிய ஆண்டு வரி அதிகரிப்பின் ஆண்டாக மட்டும் அமையப்போவதில்லை. அது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இலங்கைத் தீவின் அரசியல் அவலம். ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் தலைவர் யார் என்பதற்குத் தேர்தல் நடக்கும். ஆண்டின் இறுதியில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல். ஒரு தேர்தலில் தொடங்கி மற்றொரு தேர்தலில் முடியப்போகும் ஆண்டு.

நாடு இப்போதுள்ள நிலையில் தமிழரசியல் இப்போதுள்ள நிலையில்; தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தேர்தல் அவசியமா?என்று ஒரு நண்பர் கேட்டார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ்மக்களுக்கு எதைப் பெற்று தந்திருக்கின்றது? எதையுமே பெற்றுத் தரவில்லை. அதற்கு அதன் தலைமைதான் காரணமா?ஒரு புதிய தலைமை கிடைத்துவிட்டால், தமிழரசுக் கட்சி அதிசயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திவிடும் என்று எதிர்பார்க்கலாமா ? என்றும் அவர் கேட்டார்.

உண்மைதான். தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது நடப்பவை யாவும் கடந்த 15 ஆண்டுகாலத் தோல்வியின் விளைவுகளே. அந்தத் தோல்விக்கு எல்லோருமே கூட்டுப்பொறுப்பு. இப்பொழுது தலைமைப் பதவிக்காகப் போட்டியிடும் அனைவருமே அதற்குக் கூட்டுப்பொறுப்பு. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மிகப்பெரிய கட்சி அது என்ற அடிப்படையில், அந்தக்கட்சியின் தோல்விதான் தமிழரசியலின் தோல்வியும் எனலாம். அக்கட்சியின் எல்லா மூத்த தலைவர்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். இவர்களில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழரசியலை வெற்றிப்பாதையில் செலுத்த முடியுமா?

யார் தலைவராக வந்தாலும் அவர்கள் முன் இரண்டு பெரிய பொறுப்புகள் உண்டு. முதலாவது பொறுப்பு, கடந்த 15 ஆண்டுகளாக உடைந்து உடைந்து சிறுத்துக் கொண்டு வரும் தமிழ் ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்பவேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் ஐக்கியம் உடைந்து போனதற்கு தமிழரசுக் கட்சி தான் பெரும் பொறுப்பு. அந்தக்கட்சி ஏனைய கட்சிகளை அவமதித்தது. அல்லது ஏனைய கட்சிகளுக்குள்ளால் தேர்தல் கேட்டு வெற்றி பெற்றவர்களை உருவி எடுத்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு, தான் ஒரு பெரிய கட்சி என்ற அடிப்படையில் மூத்தகட்சி என்று அடிப்படையில். அதற்குரிய பக்குவத்தோடு பெருந்தன்மையோடு தமிழரசுக் கட்சி நடந்து கொள்ளவில்லை.

தன்னுடைய பெயருக்குத்தான், தன்னுடைய சின்னதுக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. தான் ஒரு தும்புத் தடியை தேர்தலில் முன்னிறுத்தினாலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார்கள் என்று தமிழரசுக் கட்சி திமிரோடு நம்பியது. அதனால் ஏனைய பங்காளிக் கட்சிகள் தன்னுடைய பலத்தில்தான் கூட்டமைப்புக்குள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் கருதியது. அதனால் பங்காளிக் கட்சிகளை அவமதித்தது; புறக்கணித்தது; ஒன்றாக இருக்க முடியாதபடி அவமானகரமான ஒரு சூழலை ஏற்படுத்தியது. விளைவாக, ஐக்கியம் உடைந்தது; கூட்டமைப்பு சிதைந்தது. இப்பொழுது தமிழரசு கட்சிக்குள்ளேயே உடைவுகள் சிதைவுகள் உருவாகிவிட்டன. எனவே ஒரு மூத்த பழம்பெரும் கட்சியின் தலைவராக வரப்போகும் ஒருவர் முதலில் உடைந்து சிதறிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

08




புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '2024' எனும் பெரும்பொறி


எஸ். பிரஜீவன்ராம்




**2024ஆம் ஆண்டில் இலங்கை எதிர்கொள்ள இருக்கும் பிரதான சவாலாக பொருளாதாரப் பிரச்சினையே தொடரப்போகின்றது.**

**2024** ஆம் ஆண்டு இலங்கை மக்கள் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய காலமாக மாறியுள்ளது. அன்று தமிழரசுக்கட்சியின் தலைவர் செல்வநாயகம், 'தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' எனக் கூறினார். இன்று ஒட்டு மொத்த இலங்கை மக்களையும் கடவுளால் மட்டுமே காப்பாற்ற முடியும் என்ற சூழ்நிலையில் நாம் உள்ளோம். 2023ஆம் ஆண்டு இலங்கையர்கள் செய்த தவறுகளின் திரள்வாக, 2024ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்போகும் விளைவுகள் பாதகமானவையாகவே இருக்கப்போகின்றன. 2024ஆம் ஆண்டில் இலங்கை எதிர்கொள்ள இருக்கும் பிரதான சவாலாக பொருளாதாரப் பிரச்சினையே தொடரப்போகின்றது. குறிப்பாக 2023ஆம் ஆண்டில் நாம் எதிர்கொண்ட பிரச்சினையை விடவும் மிகவும் தீவிரமான பொருளாதாரப் பிரச்சினையை 2024ஆம் ஆண்டில் எதிர்கொள்ள நேரிடலாம். இலங்கை அரசாங்கம் ஜனவரி முதலாம் திகதி முதல் கொண்டுவரவுள்ள புதிய வரி நடைமுறைகள் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இதேவேளை புதிய 'வற்' வரித் திருத்தத்தின் மூலம் எரிபொருள்களின் விலைகளில் மாற்றம் ஏற்பட்டாலும், மின்கட்டணத்தில் அது பாதிப்பை ஏற்படத்தாது என அரசாங்கம் ஏதேதோ கூறுகின்றது. ஆனால் எரிபொருள் விலை அதிகரிப்பு என்பது இயல்பாக ஏனைய பொருள்களின் விலை, கட்டணங்கள் என்பவற்றில் இயல்பாகவே தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது சிறு குழந்தைக்குக் கூடத் தெரிந்த உண்மை. கடந்த காலங்களில் எரிபொருளின் விலை உயர்ந்தபோது, நாடு தாங்கமுடியாத பொருளாதாரச் சுமைக்குள் சிக்குண்டு நசிந்தமை கண்கூடு. அதற்குப் பின்னரும் இப்படி அவித்த மீன் துடிக்கும் என்று அரசாங்கம் கதையளப்பதை யார்தான் நம்புவர்?



## பணவீக்கம் எகிறும்

'வற்' வரி அதிகரிப்புக் காரணமாக உற்பத்திச் செலவு அதிகரிக்கப்படுவதனால் தமது உற்பத்திப் பொருள்களை போட்டி விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலைக்கு வர்த்தகர்கள் தள்ளப்படும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது. இதனால் ஆடம்பரப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இலங்கையில் இருந்து வெளியேறக்கூடும். பாதீட்டில் உறுதியளித்தபடி அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டியிருப்பதால், அதற்காக புதிதாக பணத்தை அச்சிடுதல், வெளிநாடுகளிடம் கடன் வாங்குதல் உள்ளிட்ட நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட வேண்டும். இதனால் நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து உயரும் என பல பொருளாதார நிபுணர்கள் புதிய வற் வரி தொடர்பான பாதகத் தன்மையை எடுத்துரைக்க ஆரம்பித்துள்ளனர். இக்கருத்தையே அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் சுட்டிக்காட்டியிருந்தார். வற்வரி அதிகரிப்பின் முதலாவது பாதகத்தன்மை இதுவே. இங்கிருந்துதான் அனைத்துப் பிரச்சினைகளும் சங்கிலிக் கோர்வையாக ஆரம்பிக்கின்றது.

## போதைக்கு எதிரான தாமதங்கள் எதற்காக?

இரண்டாவது பெரிய பிரச்சினையாக இலங்கையில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையாளர்கள் உள்ளனர். வடக்கு- கிழக்கு மக்களை மட்டுமே குறிவைத்து போதைப்பொருள் வர்த்தகம் இடம்பெற்றுவருவதாகப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டபோதும், அவற்றைக் கடந்து ஒட்டுமொத்த இலங்கை நாட்டையும் ஆக்கிரமித்துள்ள பெரும் பிரச்சினையாக போதைப்பொருள் பாவனையாளர்களினதும் மற்றும் பாதாள உலகக் குழுவினதும் செயற்பாடுகள் உருவெடுத்துள்ளன.

அன்று எவ்வாறு இனவாதத்தை விதைத்து தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் மோதலை உருவாக்கி அதன் மூலம் அரசியல் இலாபம் அடைந்தார்களோ, அதே போன்று இன்று போதைப் பொருள்பாவனையை ஆரம்பத்திலே கட்டுப்படுத்தத் தவறிய இலங்கையின் உயர்மட்ட அரசியல்வாதிகளும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் இலங்கை மக்களில் குறிப்பிட்ட அளவினர் போதைக்கு அடிமையான நபர்களாக மாறுவதற்குக் காரணமாக மாறியுள்ளனர். இன்று இலங்கையில் போதைப் பொருள் கலாசாரத்தை ஒழிக்கப் போகின்றோம் என வரிந்துகட்டிக் கொண்டு நிற்கும் இவர்கள் கடந்த 13 ஆண்டுக்கு முன்னரே போதைப்பொருள் கலாசாரத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இலங்கையில் போதைப்பொருள் பாவனை ஆழ வேரூன்றி இருக்குமா? உண்மை என்னவென்றால், இலங்கையில் உள்ள அதிகார வர்க்கத்தினரின் ஆதரவுடனேயே இன்று போதைப்பொருள் வர்த்தகம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

2024 ஆம் ஆண்டு புதிய வரி நடைமுறைகள் காரணமாக பொருள்களின் விலை உயர போதைக்கு அடிமையான நபர்கள் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பிப்பார்கள். காரணம் போதைப்பொருள்களைப் பெற பணம் தேவை. இந்தப் பணத்தை அல்லது போதைப்பொருள்களை பாதாள உலகக்குழுக்கள் இவர்களுக்கு வழங்கினால், இப்போது இப்பதைவிட பல மடங்கு பலம்பெற்ற குழுக்களாக பாதாள உலகக் குழுகள் மாற்றமடையும். இதன் விளைவாக குற்றச்செயல்கள் எங்கும் அதிகரிக்கும்.

## நெருக்கடிக்குள் மருத்துவத்துறை

மூன்றாவது முக்கியமான பிரச்சினையாக இலங்கை மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றமையை குறிப்பிட முடியும்.

அண்மையில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமல் விஜயசிங்கவின் கூற்றின்படி இலங்கையில் இருந்து கடந்த ஆண்டு முதல் இதுவரையில் சுமார் ஆயிரத்து 500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்களின் வெளியேற்றத்தால் நாட்டில் சிறிய மருத்துவமனைகள் 40 க்கும் மேற்பட்டவை மூடப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வாறு நாட்டை விட்டு மருத்துவர்கள் வெளியேறுவது எதிர்வரும் காலத்தில் மருத்துவத்துறையை நெருக்கடிக்குள் தள்ளும். தற்போதே பெரும் இடருக்குள் நிற்கும் மருத்துவத்துறை இந்தப் புதிய நெருக்கடிகள் காரணமாக செயற்றிறன் அற்றதாக மாறும். இதனால் மருத்துவசேவை வணிக நோக்கம் கொண்ட துறையாக மாற்றமடையும். இதன் காரணமாக பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் சிறந்த சுகாதார சேவையை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை தோற்றமடையலாம்.

## தலைவலியாகும் வைரஸ் தொற்றுகள்

நான்காவது பிரச்சினை தொற்றுகளின் தாக்கம். இப்போது இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை. இந்தப் பின்னணியில், வைரஸ் தொற்று நோய் பாதிப்புகளையும் இலங்கை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய காலமாக 2024ஆம் ஆண்டு காணப்படலாம். குறிப்பாக இந்தியாவில் பரவலாகக் காணப்படும் கொரோனா வைரஸின் மாறுபாடான ஜே.என்.1 வைரஸால் இலங்கை மக்கள் பாதிப்புகளைச் சந்திக்க அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஏற்கனவே இலங்கைச் சுகாதார அமைச்சு இந்த வைரஸ் தொடர்பாக எச்சரித்துள்ளது. எனின் இவ்வாறான தொற்றுநோய்களை எதிர்கொள்வதற்காண முன்னேற்பாடுகளை இலங்கை அரசாங்கம் செய்துள்ளதா? இலங்கையில் இருந்து வெளியேறும் மருத்துவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் எவ்வாறான வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது என்ற கேள்விகளுக்கான பதில்கள் கேள்விக்குறியாகவே உள்ளன.



ஒட்டுமொத்தத்தில் இலங்கை மக்களைப் பொறுத்தவரை 2024 ஆம் ஆண்டு துன்பமும் துயரமும் மிக்கதான ஆண்டாகவே அமையப்போகின்றது. கடந்த சில புத்தாண்டுகளின் தொடர்கதையே இந்த 2024ஆம் ஆண்டிலும் நீட்சியடையப்போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவு

பரமானந்தம் ஜெயக்குமார்

எங்கள் நகரில் இருந்து என் வயதில் உள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடத்தொடங்கினார்கள். எனக்கும் அந்த ஆசை தொற்றிக் கொண்டது. 'படித்து முடித்ததும் போவோம்' என்று நினைக்க பல்கலைக்கழக அனுமதி வந்து தடை போட்டது. 'பல்கலைக்கழகம் போனால் பிறகென்ன?' என்ற மாயை 3 வருட முடிவில் வேலைக்குத் தேடித் தேடி அலைந்த போது விலகியது.

படித்ததிற்குக் கிடைத்தது தலைநகரில் வேலை. தலைநகரில் தலைக்கு மட்டும் தான் வேலை. ஒவ்வொருவருடனும் கவனமாகக் கதைக்க வேண்டும். நான் எந்த ஊர் என்று தெரியாமல் இருக்கும் மட்டும் பழகி அறிவார்கள். அறிந்ததும் விலகுவார்கள். சிலர் முத்திரையும் குத்துவார்கள். நன்மை செய்ய வருவார்கள். உதவுவார்கள். என்றாலும் பணத்தில்தான் குறி இருக்கும். எதையும் எனக்கென்று சொல்லாமல் உனக்குத் தான் என்று சொல்லிச் சொல்லியே கறந்த லாபத்தில் ஏப்பம் விடும் வியாபார உலகம். மறுபுறத்தில், தலைநகரத்தின் கைகளைக் கொண்டு உழைத்து வாழ வழிவிடும் இயந்திர வாழ்க்கை. உழைக்க, பிழைக்க பாதைகள் பல இருக்கும், தேவையும் பல இருக்கும். ஆனால் பாதைகளில் குழிகளும் தேவைகளில் டாம்பீகமும் மறைந்திருக்கும்.

எது எப்படியோ பரபரப்பான, நவீன, புதுமையான தலைநகர் வாழ்க்கை எனக்குப் பிடித்துப் போய்விட்டது. தலைநகரத்தில் வாழ்ந்த சிலர் என்னோடு படித்திருந்தார்கள். அவர்களின் நடை உடை பாவனையும், காரியங்களைச் லாவகமாகவும் கச்சிதமாகவும் கையாளும் விதமும் என்னைக் கவர்ந்தன. மென்மையாகவே பேசும் குடும்பப்பாணியும் பேசாமலே குறிப்பறிந்து நடிப்பதும் என்னை ஈர்த்திருந்தது. என் நகரத்திலும் இது ஒன்றும் புதிதல்ல. என்றாலும் தலைநகரில் கற்றுக் கொள்ள நிறைய பாடங்கள் இருந்ததால் தலைநகரில் தொடர்ந்து வாழத் துணிந்து விட்டேன்.

மெல்ல மெல்ல பாடங்கள் விளங்கத் தொடங்கின. போட்டி போடும் உலகம். போட்டிக்குள் பொறாமையும், பொறாமைக்குள் போட்டியையும் மறைத்துக் கொண்டு நாகரிகமாக கதைக்கும் கைதேர்ந்த கலையே முதல் பாடமாக இருந்தது. அதை 'ஸ்மார்ட்டான' முறை என்றார்கள். 'ஸ்மார்ட்டான' பாடங்களை கற்க

கற்க சவால்களுக்கு முகம் கொடுக்கப் பழகினேன். மோதல்களை வளைக்கவும் திருப்பவும் தவிர்க்கவும் 'ஸ்மார்ட்' முறைகள் பெரிதும் உதவின.. யுத்தத்தின் சத்தம் இன்னும் ஓயவில்லை. கிராமத்தில் பெற்றோரும் உற்றாரும் சேர்த்து வைத்த செல்வத்தை விற்று தலைநகரில் தேவைகளை வாங்கினர் சிலர். கடும் குளிரிலும் மழையிலும், வெயிலிலும் பனியிலும் உழைத்ததை வாரி இறைத்து செலவழித்து வாழ்ந்தார்கள் ஒரு சாரார். மறு சாரார் எங்கிருந்து தொடங்கினார்களோ அங்கேயே செல்வத்தைப் பெருக்கினார்கள். கூட எங்கிருந்தார்களோ அங்கேயும் பெருக்கினார்கள். எனக்கு என் உழைப்பு மட்டும் தான் தலைநகர வாழ்க்கை என்னையும் என் உழைப்பையும் உறிஞ்சத் தொடங்கி இருந்தது. என் உடலில் வயதுக்கென்றே காத்திருக்கும் வியாதிகள் மெல்லத் தலை காட்டத் தொடங்கின. வேலை செய்து கொண்டிருந்த பெண் தொழிலாளியின் சேலை மெஷினில் சிக்கிக் கொண்டதால், அந்தத் தொழிலாளியினையும் சேர்த்து இழுத்துக் கொள்ளப் போகும் நிலைக்கு தள்ளப்பட்டேன்.. எங்கயோ ஒரு நாட்டில் ரோபோ ஒன்று மனிதனை பெட்டி என்று நினைத்து நசுக்கி விட்டது.

யுத்தத்தின் சத்தம் ஓய்ந்திருந்து மீண்டும் தலைநகரத்தில் இருந்து தடைப்பட்டிருந்த புகையிரதம் என் நகருக்கும் ஓடத் தொடங்கியிருந்தது. என் பெற்றோர் அவர்களின் ஊரில் வாழ விரும்ப என் நகருக்குச் செல்ல ரிக்கற்றை'புக்' பண்ணினேன். ஐயோ! பெயர் பெற்ற என் பெருநகரமா இது? பொன்னகை அணிந்த தலைநகரம் எங்கே? புன்னகை அழிந்த என் நகரம் எங்கே? இல்லை இல்லை, அது நகரமல்ல தலைநகரத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களின் முன்னால் கிராமமாக ஒடுங்கியே எனக்குத் தோன்றியது.

பெற்றோரைப் பார்ப்பதற்கென்று என்நகரத்துக்கு போய் வந்தேன். மெல்ல மெல்ல கிராம நிலையில் இருந்து மீண்டு எழுந்தது என் நகரம். வயதான பெற்றோரைக் காவித் திரியும் பழைய இரு சக்கர, முச்சக்கர வண்டிகள் ஆங்காங்கே காணக்கிடைத்தன.

அரச பேருந்துகளைத் தவறவிட்டவர்களுக்கு ஈடு செய்ய புது வகையான இரு சக்கர வாகனங்கள் வரத் தொடங்கின. புது வகையான வாகனங்களும் தலைநகரத்தில் விற்கமுடியாத பொருள்களும் வந்து குவிந்தன. கூடவே பெருச்சாளிகள் கொண்டு வந்த வில்லைகளையும் தொல்லைகளையும் நசிந்தவர்களிடம் விற்கப்பட்டது.

தலைநகரத்து வாழ்க்கையின் கறுப்புப் பக்கங்கள் தலை விரித்தாடத் தொடங்கியிருந்தது. பணம் தானே அவர்களின் குறி. கசந்த உண்மைகளை சுமந்து கொண்டு தலைநகரத்துக்கு விரைந்தேன்.

புது வருட கலண்டர்கள் நகைக் கடையில் ஒன்றில் திரண்டு கிடந்தன. எனக்கொன்றை கேட்டுப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு விரைந்தேன். புரட்டிப் பார்த்தேன். கட்டம் போட்ட வெள்ளைப் பெட்டிக்குள் கறுப்பு எண்களும் சிவப்பு எண்களும் அச்சடிக்கப்பட்டிருந்ததன. கூடவே சில அறிஞர்களின் அனுபவ உண்மைகள் பெட்டிகளில் எழுதப்பட்டிருந்தன. 'உன் சக்தி அப்பால் வாழும் இடமே மோசமானது' (The worse place you live is beyond your means) என்று பொறிக்கப்பட்டிருந்தது.

பொறி பறந்தது. முடிவெடுத்துவிட்டேன் என் நகரத்துக்குச் செல்ல.



# ஈடாடுது வீடு

யோ.சாதுரியன்

எப்போதுமே எங்கட ஊர்ச்சனத்துக்கு செல்லத்தாரின்ர வீடு டெண்ட ஒரு தனிப்பற்றுப்பாருங்கோ. அந்தக்காலத்தில மனிசன் தனிஆளா உந்த வீட்டைக்கட்டி உந்த வீட்டில இருந்து சனத்தைக்கூட்டி, அவைக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகளை அரசாங்கத்திட்ட இருந்து வாங்கிறதுக்காக படாதபாடு பட்டதெண்டு என்ர அப்பு சொல்லுறவர். ஏனெண்டா அப்பு அந்தக்காலத்தில செல்லத்தாரில சரியான பற்றானவராம். 'அவர் செல்லத்தாரின்ர வீட்டைப்பற்றி உன்னட்டப் புளுகிறார் மோனே' எண்டு ஆச்சி சொல்லும். ஆச்சியின்ர பரம்பரைக்கு பொன்னரிட டைனமோசயிக்கிள்ளதான் ஒரு விருப்பம். நான் இப்ப ஆட்டுக்கமாட்டை விடேல்ல. அதால டைனமோச் சைக்கிளைப் பற்றிப் பிறகு பாப்பம், இப்பசெல்லத்தாரின்ர வீட்டுப்பிரச்சினையப் பாப்பம்.

செல்லத்தார் இல்லாமல் போனபிறகு, அந்த வீட்டுக்கு தலையாரியாக் கனபேர் வந்திட்டினம், ஆனால் அவையெல்லாரையும் வீட்டில இருக்கிற எல்லாரும் விரும்பி தலையாரியா ஏற்றுக்கொண்டிச்சினம். ஆனால் இந்த வீட்டில இதுவரைக்கும் இல்லாத புதுமையா புதுத் தலையாரியா ஆர் இருக்கிறதெண்டு வீட்டுக்குள்ளயே வோட்டுப் போட்டு தெரிவு செய்யப்போயினமாம்.

உள்வீட்டுத்தெரிவு தானே? உதில என்னபிரச்சினையெண்டு நீங்கள் கொந்தளிக்கலாம். ஆனா உவையள் வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிக்கிறமாரி உள்வீட்டில தலையாரிய தெரிவுசெய்துபோட்டு பிறகு அவரை ஊர்த்தலையில கட்டிப் போடுவினம்.

பிறகு அரசாங்கத்தோட கதைபேச்சுவாறநேரங்கள்ள செல்லர்வீட்டு தலையாரி தலையாட்டினால், ஊர்ச்சனமே தலையாட்டினமாதிரி எண்டு அரசாங்கமும், உலகத்தாரும் கணக்கை முடிச்சுப்போடுவினம். இப்பிடித்தான வடக்கு வாசல் மடத்துக்கு, ராஜாதிராஜ ராஜ விக்கிரமனெண்டு ஒருத்தரைப் பெரிய பட்டணத்தில இருந்து கொண்டுவந்தவை கடைசில பிள்ளையார் பிடிக்க குரங்காகிப்போன மாதிரி, அந்த விக்கிரமன் மடத்தையும் நாசமாக்கி, வீட்டையும் உடைச்சுக் கொண்டு தன்வழி தனி வழி என்று போன கதை தெரியும் தானே. அதைமாதிரியான இன்னொரு கதை நடக்கக்கூடாது தானே.

எங்கட காவல்காரப் பெடியள், உந்த அரசாங்கக்காரரோட சன்னதமாடி சனத்தைக் காப்பாத்தேக்க, உந்த வீட்டில இருக்கிறவை எல்லாரும் பம்மிக்கொண்டிருந்தவை. இப்ப வீட்டுக்கை புதிசா வந்து குந்தியிருக்கிற கனபேர் அப்ப வீட்டுக்கு கிட்டயும் வாறதில்லை. சனத்தையும் எட்டி என்னெண்டு பார்க்கிறேலை. எல்லாம் எங்கட பெடியள்தான் எண்ட காலம் அது. அதோட வீடெல்லாம் இடிஞ்சு, பாழடைஞ்சு போய் கிடக்கேக்க, வேலரின்ர மகன் தான் திரும்ப உந்த வீட்டுக்கு வெள்ளையடிச்சு, முகடுபோட்டு, நாலைஞ்சு தூணை வெளியால இருந்து கொண்டந்து போட்டு திரும்ப ஆக்கள் இருக்கிற மாதிரி ஆக்கினவர். இந்த வீடு இருந்தால் ஏதோ ஊர்ப்பிரச்சினையில கொஞ்சத்தையாவது தீர்க்கலாம் எண்டதுதான் அவரின்ர நினைப்பு. ஆனால் வேலரின்ர மகனும், அவரின்ர காவல்காரப் பெடியளும் இல்லாமல் போனபிறகு வீட்டில இருந்தவைக்கு குளிர்விட்டுப் போச்சுது. எல்லாரும் தங்கட நினைப்புப்படி ஆட வெளிக்கிட்டிட்டினம். வேலரின்ர மகன் கஷ்டப்பட்டு வெளியால இருந்து கொண்டந்து போட்ட தூணையெல்லாம் ஒருமாதிரி தூக்கி வெளியில போட்டிட்டினம். அதுதான் இப்ப உள்வீட்டு எலக்சனில தலையாரியைத் தெரிவு செய்யிற அளவுக்கு வந்து நிக்குது. வீடும் ஈடாடிக் கொண்டிருக்குது.

ஊர் மட்டுமில்லை, செல்லத்தாரின்ர வீடு ரண்டு பட்டாலும் அரசாங்கக் கூத்தாடியளுக்குக் கொண்டாட்டம் தான். அதால இப்ப உந்த உள்வீட்டு எலக்சன் தேவையோ எண்டதை வீட்டுக்காரர் கொஞ்சம் யோசிக்க வேணும். ஆனால் சனம் என்ன சொன்னாலும் அவை தாங்கள் நினைச்சதைத்தானே செய்யப்போகினம். சனி மாற்றம் செல்லத்தாரின்ர வீட்டுக்கு மங்கு சனியா, பொங்கு சனியா? எண்டதைப் பொறுத்திருந்துதான் பாக்கோணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயகாந்த்:




## சொல்லப்படாத சில பக்கங்கள்

அது 1973 ஆம் ஆண்டு மே 11 ஆம் திகதி. அப்போதைய அரசியல் சூழலில் 'வெளிவரவே வராது' என்று பேசப்பட்ட எம்.ஜி.ஆரின் உலகம் சுற்றும் வாலிபன் தமிழகமெங்கும் பல்வேறு தடைகளை மீறி வெளியானது. மதுரையில் மீனாட்சி திரையரங்கில் படம் ஓடிக்கொண்டிருந்தது. படத்தைப் பற்றிய எதிர்பார்ப்பு ஏகத்துக்கும் எகிறி இருந்ததால் படத்தைப் பார்க்க கூட்டம் முண்டியடித்தது. அந்தக் கூட்டத்தில் அடித்துப் பிடித்து சட்டை கிழிய ரிக்கெற் வாங்கி, நண்பர்கள் புடைசூழ முதல் நாள் முதல் காட்சியைப் பார்த்த, தீவிர எம்.ஜி.ஆர். ரசிகனான அந்த 21 வயது கறுப்பு நிற துருதுரு இளைஞனுக்கு பின்னாளில் தான் 'கறுப்பு எம்.ஜி.ஆர்.' என்று புகழப்படுவோம் எனத் தெரியாது. 1952 ஆம் ஆண்டு மதுரை திருமங்கலத்தில் பிறந்த விஜயகாந்த் சிறுவயது முதலே தீவிர எம்.ஜி. ஆர். ரசிகர்.

மதுரை மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத்தில் உறுப்பினர். அவர் படங்கள் வெளியான அன்றே பார்த்துவிடுவார். அதுவும் தனியாகப் போகமாட்டார். குறைந்தது 10 நண்பர்களோடு செல்வது வழக்கம். படத்தைப் பார்த்துவிட்டு வந்து எம்.ஜி.ஆரின் நடிப்பு. நடனக் காட்சிகளில் சுறுசுறுப்பு, சண்டைக் காட்சிகளில் அவரது வேகம், லாவகம் இவற்றைப் பற்றி எல்லாம் நண்பர்களிடம் அக்குவேறு ஆணிவேறாக அலசுவார்.

விஜயகாந்தின் தந்தை அரிசி ஆலை நடத்தி வந்தார். வசதியான குடும்பம். படம் பார்க்கப் போகும்போது நண்பர்களுக்கும் ரிக்கெற் எடுப்பார். படம் முடிந்து ஹோட்டல் சாப்பாடும் விஜயகாந்த் செலவுதான். இதற்காக, எம்.ஜி.ஆர். படம் வெளியாகும் போதெல்லாம், அரிசி ஆலையில் இருந்து அரிசி மூடைகள் காணாமற் போகும். அப்படித்தான் 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தையும் நண்பர்களோடு பார்த்திருக்கிறார்.







### எம்.ஜி.ஆருடன் விஜயகாந்த்

அப்போது அ.தி.மு.க.வை எம்.ஜி.ஆர். ஆரம்பித்திருந்த நேரம். 'உலகம் சுற்றும் வாலிபன்' படம் வெளியாகி 10 ஆவது நாளில் மே 20 ஆம் திகதியன்று திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல். பிரசாரத்துக்குச் சென்ற எம்.ஜி.ஆரோடு ரசிகர்களும் அவர் பின்னாலேயே கூட்டமாகச் செல்ல, அந்தக் கூட்டத்தில் விஜயகாந்த்தும் ஒருவர்!

அப்போது, எம்.ஜி.ஆர். தன் கூடவே வரும் ரசிகர்களுக்கும் தொண்டர்களுக்கும் வேளை தவறாமல் உணவு கொடுக்கச் சொல்லியிருக்கிறார். அந்த உணவின் ருசியை பல ஆண்டுகளுக்குப் பின்னும் சொல்லிக் கொண்டிருந்தார் விஜயகாந்த். எம்.ஜி.ஆர். மீதான ஆர்வம் சினிமா மீதான ஆர்வமாகமாறி தானும் நடிகனாக வேண்டும் என்ற ஆசையோடு சென்னை வந்த விஜயகாந்த் பட வாய்ப்புகளுக்காக சிரமப்பட்டார். தனது திறமையாலும் கடுமையான உழைப்பாலும் முன்னேறி திரையுலகில் புரட்சிக் கலைஞராக உயர்ந்தார்.

1979 ஆம் ஆண்டு 'இனிக்கும் இளமை' படத்தில் விஜயகாந்த் அறிமுகமானார். ஆரம்ப காலங்களில் திரைப்படங்களில் எம்.ஜி.ஆர். ரசிகராகவே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். விஜயகாந்த் மதுரையைச் சேர்ந்தவர். எம்.ஜி.ஆர். நடித்த 'மதுரை வீரன்' படத்தின் தலைப்பு விஜயகாந்த்துக்குப் பிடித்துப்போக அதே பாணியில் 'மதுரை சூரன்' என்ற விஜயகாந்த் நடித்த படம் 1984 ஆம் ஆண்டு வெளியானது. எம்.ஜி.ஆரை வாத்தியார் என்று ரசிகர்கள் அழைப்பார்கள். அதே ஆண்டில் 'மெட்ராஸ் வாத்தியார்' என்ற படத்திலும் எம்.ஜி.ஆர். படம் போட்ட பனியன் அணிந்து நடித்தார் விஜயகாந்த். 1972 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆரின் 'ராமன் தேடிய சீதை' படம் வெளியான சமயம். ரசிகர்களோடு மதுரையில் இருந்து லொறியில் சென்னை சென்று சத்யா ஸ்டூடியோவில் கூட்டத்தோடு கூட்டமாக எம்.ஜி.ஆரைப் பார்த்திருக்கிறார் விஜயகாந்த்.

திரையுலகில் முன்னணி நடிகரான பிறகு எம்.ஜி.ஆரை தனிப்பட்ட முறையில் சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு அமையவில்லை. நடிகர் ராஜேஷ் மூலம் அந்த வாய்ப்புக் கிடைத்தது. நடிகர் ராஜேஷின் இல்லத் திருமணத்துக்கு அவரது அழைப்பின் பேரில் எம்.ஜி.ஆர். சென்றார். திருமண விழாவுக்கு விஜயகாந்தும் வந்திருந்தார். அவரை எம்.ஜி.ஆரிடம் ராஜேஷ் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது, அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தபின் எம்.ஜி.ஆருக்கு உடல்நிலை சரியில்லை. அவரால் சரியாகப் பேசமுடியவில்லை. அந்தச் சமயத்தில் ஒரு படத்தின் படப்பிடிப்பில் துப்பாக்கியால் சுடும் காட்சியில் விஜயகாந்த் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியிருந்தார். எம்.ஜி.ஆருக்கு பேசமுடியாததால், துப்பாக்கியால் சுடுவது போல ஜாடை காட்டி' உடல்நிலை எப்படி இருக்கிறது? 'என்று சைகையாலேயே விசாரித்திருக்கிறார்.

அவரது அன்பில் நெகிழ்ந்து போனார் விஜயகாந்த். புறப்படும்போது, விஜயகாந்தின் கைகளைப் பற்றிக் கொண்டு, 'வீட்டுக்கு வாருங்கள்' என்று எம்.ஜி.ஆர். அழைப்பு விடுத்திருக்கிறார். அதற்கான சந்தர்ப்பம் அமைவதற்குள் எம்.ஜி.ஆர். காலமாகிவிட்டார். அந்த வருத்தம் கடைசிவரை விஜயகாந்துக்கு இருந்தது.

எம்.ஜி.ஆர். தனது உயிலில் கூறியபடி, அவரது மறைவுக்குப் பிறகு ராமாவரம் தோட்டத்தில் அமைக்கப்பட்ட வாய்பேச இயலாத, காது கேளாத சிறப்புக் குழந்தைகளுக்கான பள்ளி இன்றும் செயற்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் 25 ஆம் திகதி தனது பிறந்த நாளன்று அந்தப் பள்ளிக்கு நன்கொடை வழங்கி அங்கு படிக்கும் குழந்தைகளுடன் சாப்பிடுவதை விஜயகாந்த் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

எம்.ஜி.ஆரின். மறைவுக்குப் பின் அவரது துணைவியார் ஜானகி அம்மையாரிடமும் மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருந்தார். அவரை 'அம்மா' என்றுதான் அழைப்பார். ராமாவரம் தோட்டத்துக்கு அவ்வப்போது குடும்பத்துடன் செல்லும் விஜயகாந்த், ஜானகி அம்மையாரிடம் உரையாடி, அங்கு சாப்பிட்டு விட்டு வருவார்.

எம்.ஜி.ஆர். தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்திய TN W 2005 என்ற வெளிர் நீல நிறம் கொண்ட பிரசார வாகனத்தை 1996ம் ஆண்டு விஜயகாந்துக்கு ஜானகி அம்மையார் அன்பளிப்பாகக் கொடுத்தார். எம்.ஜி.ஆர். வழியைப் பின்பற்றி அவரைப் போலவே விஜயகாந்தும் 2005 ஆம் ஆண்டு தனிக்கட்சி தொடங்கினார்.

மதுரையில் நடைபெற்ற தே.மு.தி.க. தொடக்க விழாவுக்கு 'சென்டிமென்டாக' எம்.ஜி.ஆரின் பிரசார வாகனத்திலேயே விஜயகாந்த் வந்தார். பின்னர், தேர்தல் பிரசாரத்துக்கும் அந்த வாகனத்தையே பயன்படுத்தினார். எம்.ஜி.ஆரைப் போலவே திரையுலகில் விஜயகாந்த் கஷ்டப்பட்டு முன்னேறியவர். எம்.ஜி.ஆர். மாதிரியே பலருக்கும் உதவியிருக்கிறார். எத்தனையோ பேரை கைதூக்கி விட்டிருக்கிறார். சினிமாவில் வாய்ப்புத் தேடிவந்த புதியவர்கள் பலருக்கு வாய்ப்பளித்திருக்கிறார். அரசியலில் அவரதுசில செயற்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கலாம். ஆனால், கறுப்பு எம்.ஜி.ஆர். என்று புகழப்பட்ட விஜயகாந்தின் மனித நேயம் விமர்சிக்கப்பட முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



**க.கோபிஷாந்**
தரம் - 2
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.



**ம.லக் ஷிதா**
தரம்- 2A
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்



**எஸ்.ஹரினி,**
தரம் - 3
உடுவில் மகளிர் கல்லூரி.








**பி. சஞ்ஜேய்**
தரம் - 4
யா /கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



**க.தனிகன்**
தரம் - 1
யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம்.

**சுவஸ்திகன்,**
தரம் - 3B
யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம்.






**து. மகிழினி.**
முன்பள்ளி
ஞானசம்பந்தர் கலாமன்றம்.
பருத்தித்துறை.




நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# மங்குஸ்தான்




நான் தான் மங்குஸ்தான் மரம் பேசுகிறேன். எனது தாவரவியல் பெயர் கர்சினியா மங்கோஸ்டினா என்பதாகும். நான் குளுசியாசியே குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் மலைப் பகுதிகளில் அதிகம் விளைவேன். இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா, மியான்மர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் என்னை விரும்பி வளர்த்து பயன்கள் பல பெறுகிறார்கள்.

என் பழத்தில் உங்கள் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துச் சத்துகளும் உண்டு.

உங்கள் உடல் சூட்டைத் தணித்து தேகத்தை சமநிலையில் வைத்திருக்க நான் உதவுவேன். என் பழத்திலும் உங்கள் நோய்களைத் தீர்க்கும் அரும் பெரும் குணங்கள் உண்டு. என் பழத்தின் தோற்றம் மாதுளம் பழம் போன்றே இருக்கும். என் பழத்தின் தோல் பகுதியை உடைத்தால் மூன்று அல்லது நான்கு சுளைகள் இருக்கும். விவசாயிகள் தென்னைக்கு ஊடுபயிராக என்னையும் நட்டு வளர்த்து வந்தால் பயன்கள் பல கொடுப்பேன்.

## ஆங்கிலச் சொற்கள்




## 5 வித்தியாசங்கள் காண்க



## பொது அறிவு

1.உலகில் மிகச் சிறிய முட்டையிடும் பறவை எது ?
தேன்சிட்டு
2.கறையான் அரிக்காத மரம் எது?
தேக்கு
3.இந்தியாவின் தேசிய விலங்கு எது?
புலி
4.நீந்தத் தெரியாத விலங்கு எது ?
ஒட்டகம்
5.மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
உதடு
6.பறக்கும் இயல்புள்ள முலையூட்டி எது?
வௌவால்
7.வானொலியைக் கண்டுபிடித்தவர்?
மார்க்கோனி
8.இயற்கை ஒளி முதல் எது?
சூரியன்
9.மிகச் சிறிய இதயம் உடைய விலங்கு எது?
சிங்கம்
10.மிக வேகமாக வளரும் புல்லினம் எது?
மூங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தலிங்கம் கொலை வழக்கு



கே.வி.தவராசா





அமிர்தலிங்கம் கொலை வழக்கில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் கொலை நடந்த இடத்திலேயே மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். வெளியே இருக்க வேண்டிய பலர் சூழ்நிலைக் கைதிகளாக உள்ளே இருக்கின்றார்கள். இது வேதனைக்குரியது மட்டுமின்றி நியாயப்படுத்த முடியாததுமாகும்.




## நீதிக்கான நெடும்பயணம்

### சிவசிதம்பரத்தின் வாக்குமூலம்

அமிர்தலிங்கமும் நானும் யோகேஸ்வரனும் மேல்மாடிக்கு வந்த இரண்டு இளைஞர்களுடன் சுமுகமாகப் பேச்சில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். ஏறத்தாழ ஒரு மணித்தியாலயம் வரை பேச்சு நடந்தது. அந்தப்பேச்சு சினேகபூர்வமாகவே நடந்தது. இடைக்கிடையே நகைச்சுவையான விடயங்கள் கூடப் பேசப்பட்டு எல்லோரும் சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் திடீரென நிலைமை மாறியது. நாங்கள் எவரும் சிறிதும் எதிர்பார்க்காத வகையில், இரவு 7மணி 35 நிமிடமளவில் அங்கு வந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் திடீரென தனது இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அமிர்தலிங்கத்தின் தலையை நோக்கிச் சுட்டார். மற்றைய இளைஞர் என்னை நோக்கிச் சுட்டார். ஆனால் அந்தத் துப்பாக்கிச்சூடு குறி பிசகி எனது வலது தோள் பட்டையில் பாய்ந்தது. அதனாலேயே நான் உயிர் பிழைத்தேன்.

யோகேஸ்வரனை மட்டும் குற்றம் காண்பது எனது நோக்கமல்ல . இந்த சம்பவத்துக்கு சில நாள்களுக்கு முன்னர் சப் இன்ஸ்பெக்டர் கந்தசாமி என்பவர், அமிர்தலிங்கத்திடம் பாதுகாப்பு சம்பந்தமாக உள்ள குறைபாடுகளைக் கூறி யாராயிருந்தாலும் சந்திக்க வருபவர்களை பாதுகாப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனக்கூறியுள்ளார். அப்பொழுது அமிர்தலிங்கம் "எங்களிடம் பேச்சுக்கு வரும் பொடியன்களை உடல் ரீதியாக பாதுகாப்புப் பரிசோதனை செய்தால் அவர்கள் பேச்சுக்கு வரமாட்டார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சூழ்நிலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. மாவை சேனாதிராஜா தனக்குத்தெரிந்த, தான் கண்ட சம்பவங்களை நீதிவான் நீதிமன்ற விசாரணைகளில் சாட்சியம் அளித்ததோடு பிரேத பரிசோதனையில் இறந்த உடல்களை அடையாளமும் காட்டினார்.

### மரியதாஸ் மீண்டும் கைது

1407 - 1989 அன்று பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சுமார் ஏழு வருடங்களாக நடைபெற்ற நீதிமன்ற விசாரணையின் பின் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிரபராதி என விடுதலை செய்யப்பட்ட வின்சன்ட் வில்லியம் மரியதாஸ், 16 வருடங்களின் பின்னர்-இறுதிப் போர் முடிவடைந்து 2009ஆம் ஆண்டு மே மாதம்-வவுனியாவில் அமைந்திருந்த முகாமில் வைத்து மீண்டும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகக் கொழும்பு கொண்டுவரப்பட்டிருந்தார். அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பொட்டம்மானின் பிள்ளைகளுக்கும் மற்றைய மாணவர்களுக்கும் வகுப்புகளை நடத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

1989 ஆம் ஆண்டு தனது கணவருக்கு விடுதலை பெற்றுத் தரும்படி தனது 6 மாதக் கைக்குழந்தையுடன் வந்த மரியதாஸின் மனைவி, மீண்டும் 20 ஆண்டுகளின் பின்னர் 2009 ஆம் ஆண்டு தனது 21 வயது மகனுடன் வந்து தனது கணவர் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருப்பதையும், அவரை மீட்டுத் தரும்படியும் கண்ணீரோடு வேண்டிக்கொண்டார். இது என் சட்டத்துறை அனுபவத்தில் மறக்கமுடியாத சம்பவமாகும். மரியதாஸின் மனைவி சுன்னாகம் கந்தரோடையில் பிரபல ஆயுர்வேத மருத்துவராகயிருந்த ஜோர்ஜ் பரியாரியின் மகளாவார்.

1971ஆம் ஆண்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி உதைபந்தாட்டக் குழுவில் விளையாடிய பொழுது குழுவில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஏற்படும் நெளிவு, சுழிவுகளுக்கு மருத்துவம் செய்ய ஜோர்ஜ் பரியாரியிடமே நாங்கள் செல்வது வழக்கம்.

மீண்டும் மரியதாஸின் விடுதலைக்காக உயர் நீதிமன்றில் அவரது விடுதலை வேண்டி சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மரியதாஸ் கொழும்பு நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டார். பின்னர் சட்டமா அதிபரினால் மரியதாஸுக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.



மரியதாஸ் சார்பாக எமது வேண்டுகோளை அடுத்து சட்டத்தரணி அன்டன் புனிதநாயகம் மேல் நீதிமன்ற விசாரணையில் ஆஜராகினார். விசாரணை முடிவில் அரச தரப்பினால் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் மரியதாஸ் நிரபராதியென வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் அவர்களினால் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டு குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர்.வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள் ஒரு குற்றச்சாட்டிலிருந்து விடுதலையாவதே கேள்விக்குறியாகக் காணப்படும் சூழ்நிலையில், யுத்தகாலத்தில் ஒரு குற்றச்சாட்டிலிருந்தும், யுத்தம் முடிவடைந்த பின்னர் இன்னொரு குற்றச்சாட்டிலிருந்தும் ஒரு அரசியல் கைதி விடுதலையாகி தனது குடும்பத்துடன் இணைந்துள்ளமை நம்பமுடியாத சம்பவமே. அவர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் தனது மனைவியுடனும் மகனுடனும் கொழும்புக்கு வந்து எங்களுக்கு நன்றி கூறி விடைபெற்ற காட்சியும் மறக்க முடியாத நினைவே.

அமிர்தலிங்கம் கொலை வழக்கில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் கொலை நடந்த இடத்திலேயே மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். மரியதாஸ் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் படி மரியதாஸ் ஒரு சூழ்நிலைக் கைதியேயாவார். சிறையில் இருக்க வேண்டிய சிலர் வெளியே இருக்கின்றார்கள். வெளியே இருக்க வேண்டிய பலர் சூழ்நிலைக் கைதிகளாக உள்ளே இருக்கின்றார்கள். இது வேதனைக்குரியது மட்டுமின்றி நியாயப்படுத்த முடியாததுமாகும்.

மற்றவர்கள் மீது வைக்கும் அதீத நம்பிக்கையும் தனது பாதுகாப்பில் கவனம் இன்மையும் தமது பாதுகாவலர்களின் கடமையைச் சரிவரச் செய்வதற்கு அனுமதியாமையும் இந்தத் துயரச் சம்பவத்துக்கு பிரதான காரணங்களாக அமைந்தன. இந்தக் கொலைச் சம்பவத்தின் புலன் விசாரணைகளில் கொலையை நேரில் பார்த்த சாட்சிகளதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்களிலிருந்தும் எதிர்பார்க்காத பல விடயங்களை நான் அறியக் கூடியதாகவிருந்தது. எனினும் அவற்றை முற்று முழுதாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதால் அவ்விடயங்கள் சிலருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்பதால் அவற்றைத் தவிர்த்து விடுவது நல்லதே.

*(இன்னொரு வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென் சறோ வீவா: ஏமாற்றிக் கொல்லப்பட்ட புரட்சிக்குரல்



○ கோகுலராகவன்

கென் சறோ வீவா (Ken Saro Wiwa ). 1995 இல் மரணதண்டனை வழங்கப்பட்டு நைஜிரிய அரசால் சுட்டுக்கொல்லப்பட்ட நைஜீரிய எழுத்தாளர்.

ஒரு படைப்பாளி சந்தர்ப்பவாதியாக இருக்கக்கூடாது என்பதை நிரூபித்த, போராளி எழுத்தாளனாக கென்னின் இலக்கிய வாழ்க்கை இருந்தது.

நைஜிரியா இயற்கை வளம் கொண்ட நாடு. ஆபிரிக்க நாடுகள் பலவும் இயற்கை வளம் கொண்டவைதான்.

ஆனால் அவற்றை அந்நாட்டு மக்கள் அனுபவிக்கிறார்களா? என்றால் 150% தெளிவான பதில் "இல்லை "என்பதே கிட்டத்தட்ட 500 வருடமாக மேற்குலகமே அவர்களது இயற்கை வளங்களைச் சுரண்டிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறது.

தங்கச்சுரங்கங்கள், வைரச்சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள், கனிம வயல்கள் எல்லாம் மேற்குலகின் கைவசமே இருக்கின்றன.

ஆபிரிக்காவில் பல நாடுகளில் தங்கம் நிறைய எடுக்கப்பட்டு உலகம் முழுவதும் மேற்குலகால் விற்கப்படுகின்றது.

ஆனால், ஒரு ஆபிரிக்கப் பெண் குழந்தை ஒரு மஞ்சாடி நிறையில் காதில் ஒரு கம்மல் போட்டிருக்குமா? அல்லது கண்ணால்தான் கண்டு இருக்குமா? வேதனையல்லவா?

இந்த வேதனையே,கென் வைவாவை அக்கிரமத்துக்கு எதிராகப் போராட வைத்தது.

நைஜீரிய எண்ணெய்க் கிணறுகளை பிரித்தானிய பெற்றோலிய நிறுவனமான 'ஷெல்'(Shell) நடத்திக்கொண்டிருந்தது.

இதற்கு நைஜீரிய நாட்டு இராணுவ அரசும் உடந்தையாக இருந்தது.

உன்னிப்பாக அவதானியுங்கள், அநேகமான ஆபிரிக்க நாடுகளில் இராணுவ ஆட்சிதான். தமது சுரண்டலுக்கு வசதியாக, இத்தகைய இராணுவ ஆட்சிக்கு மேற்குலகின் ஆசீர்வாதம் நிச்சயமாக இருக்கும்.

இத்தகைய சுரண்டலுக்கு எதிராக, கென் என்ற எழுத்தாளர், தொலைக்காட்சித் தயாரிப்பாளர், சூழலியலாளர் போராடத் தொடங்கினார். சுரண்டல்களை நிறுத்தவேண்டும், தங்கள் நாட்டில் எடுக்கப்படும் வளங்களில் ஒரு பங்கை வறுமையில் வாடும் மக்களுக்குத் தரவேண்டும் என்பதே அவரது கோரிக்கைகளாக இருந்தன.

அவரது போராட்டம் அகிம்சை வழியிலேயே நிகழ்த்தப்பட்டது. போராட்டம் நாடு முழுவதும் பரவிய போது, இராணுவ அரசு அடி பணிந்து கென்னை பேச்சுக்கு அழைத்து சில விடயங்களை விட்டுக்கொடுக்க உடன்பட்டது.

இது ஒரு தந்திர நடவடிக்கை மட்டுமே.

கென்னின் போராட்டத்தை நிறுத்தவே இந்தப் பேச்சு நாடகம். சில நாள்களில் கென்னின் 'ஓகோனி' (Ogoni) இனக்குழு மீது வன்முறையை இராணுவ அரசு ஏவியது. நான்கு ஓகோனி இனக்குழுத் தலைவர்கள் திட்டமிடப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலையை கென்தான் செய்தார் எனக்கூறி அவரை இராணுவ அரசு கைது செய்தது.

போலியாக ஒரு பக்க விசாரணையை நடத்தி அவசரமாக கென்னுக்கு மரணதண்டனை விதித்து உடனடியாக அது நிறைவேற்றப்பட்டது .

கென் ஏமாற்றப்பட்டிருந்தார்.

சர்வதேசத்தின் கண்டனக்குரலைக்கூட இராணுவ அரசு கருத்தில் எடுக்கவில்லை. இதனால் நைஜீரிய அரசை பொது நலவாய அணியில் (Commonwealth) மூன்று வருடங்கள் நீக்கி வைத்திருந்த வரலாறும் உண்டு.




கென் சறோ வீவா இன்றுவரை நினைவு கூரப்பட்டு வரும் தியாகியாகவே இருக்கிறார். ஆனால் அவரது கனவு இன்னும் உண்மையாகவில்லை.

நைஜீரியாவில் தற்போது ஜனநாயக அரசு ஆட்சியில் இருந்தாலும் அங்கு முழுமையான நல்லாட்சி இல்லை."போஹேறா கோரம்" போன்ற தீவிரவாத அமைப்புகள் இயங்கி வருவது வாழ்க்கைக்கு அச்சுறுத்தலே. அவர்கள் கடத்திச் சென்ற 200 பள்ளி மாணவிகளுக்கு என்ன ஆயிற்று என்பது இதுவரை தெரியாது.




கென் தோற்றுப்போன படைப்பாளி. முதல் வெடி அவன் மீது தீர்க்கப்படும்போது என்ன நினைத்திருப்பான்?

பாவம்

தனது தொலைக்காட்சித் தயாரிப்பில்

"நானா? அவனா? இவனா?"

"அப்பர் சிங்கர் "

"கண்ணகிக்கு மூக்குத்தி வடிவா? வடிவில்லையா?"

என நிகழ்ச்சிகள் நடத்தி பிழைக்கத் தெரியாதவன்.

---

## பாகம் 2



## உளர்ப்தினம்

○ இராகவன்

இந்தக் கிழமை லொஜிக் நவத்தைப் பற்றிப் பாப்பம். இவரின்ரை வீடு நெல்லியடி மகாத்மா ஒழுங்கைக்குள்ள இருக்கு. எண்பதுகளில வடமராட்சியிலயிருக்கிற ரியூசன் சென்றர்களில லொஜிக் படிப்பிச்சு பேமஸான வர்தான் இந்த நவம். முழுப்பெயர் கந்தையா நவரத்தினம். வழமையா வேட்டிதான் கட்டுவார். நல்ல சிவலை. ஒல்லியுடம்பு. சராசரியான உயரம். இவர் விக்னேஸ்வராக் கல்லூரியில எங்களுக்கு ஏ.எல்.லில லொஜிக் படிப்பிச்சவர். அதுகுமொரு கொஞ்சக் காலந்தான். பிறகு வடமத்திய மகளிர் கல்லூரிக்கு (செல்லையா பள்ளிக்கூடம்) மாற்றலாகிப் போகிட்டார். எப்பவும் அருமையா, இருந்திட்டு நீல ட்ரவுசரும் வெள்ளைக்கோடன் சேர்ட்டும் போட்டுக் கொண்டு வருவார்.

ஆள் கொஞ்சங் கோபக்காரன். கோபந் தலைக்கேறினால் ஓ.எல் ,ஏ.எல் எண்டு பாக்கமாட்டார். ஆரெண்டாலும் வெளு வெளெண்டு வெளுத்துப் போடுவார். ஒருக்கால் உப்பிடித்தான் எங்களுக்கு

19

முதல் வகுப்புக்குத் தமிழ் படிப்பிச்சவர். அவர் வகுப்புக்கு வந்து பாடம் எடுத்துக் கொண்டிருந்தவர். அந்த வகுப்பில படிக்கிற ராஜ் எண்ட பொடியன், ஆள் கொஞ்சம் சண்டியன். எங்கையோ போட்டு அப்பதான் வகுப்புக்குள்ள நுழைஞ்சவன். ஒரு கதையுமில்லை. 'வாடா இஞ்சை'எண்டு வகுப்புக்கு முன்னுக்குக் கூப்பிட்டு மாறி மாறிக் கன்னத்தைப் பொத்தி மின்னத் தொடங்கிட்டார். அண்டையிலயிருந்து எங்களுக்கெல்லாம் அவரைக் கண்டால் சரியான கெடிக்கலக்கமாயிருக்கும். லொஜிக் படிப்பிக்கிறதிலயிருந்த 'ரலன்ற்' அவருக்கு தமிழிலயுமிருந்தது. ஏ.எல்.லுக்கு தமிழ் படிப்பிக்கிறதிலயும் வலுபேமஸாயிருந்தவர். எனக்கு அவரோட நேரடிப் பழக்கம் வந்தது ஒரு தனிக்கதை. நான் ஆண்டு பத்தில் படிக்கேக்குள்ள இப்ப கிட்டடியில காலமான கருணையோகன் (செ.யோகராசா) தான் தமிழ்மொழியும் இலக்கியமும் எங்களுக்குப் படிப்பிச்சவர். அவரிட்டத் தமிழ்மொழியும் இலக்கியமும் படிக்கிறதுக்கு உண்மையில கொடுத்து வைச்சிருக்கோணும். இதிலையும் ஒரு சிக்கல் வந்தது. அவர் எங்களுக்கு தமிழ் படிப்பிச்சுக் கொண்டிருந்த 1991 காலகட்டத்திலதான் அவருக்குக் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில விரிவுரையாளர் நியமனங் கிடைச்சுது. அதால ஆறு மாதம் படிப்பிச்சுப் போட்டு அவர் போட்டார். அதுக்குப் பிறகு அம்பலவாணர் மாஸ்ரர் எங்களுக்குத் தமிழ்மொழியும் இலக்கியமும் படிப்பிச்சார். அம்பலவாணர் மாஸ்ரர் பொருளியல், தமிழ் இரண்டு பாடங்களையும் படிப்பிக்கிறதில வலுவிண்ணன். பிற்காலத்தில விக்னேஸ்வராக் கல்லூரியின் அதிபராயிருந்தவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய பல விளக்குகள்; சில தெறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

சபாரத்தினம் ஆசிரியர் எமது கண் முன்னே வாழ்ந்து மறைந்த ஒரு மனிதன் என்று சொன்னால் மிகையாகாது. மாந்தருள் மாணிக்கம், மாந்தருள் தெய்வம் என்றெல்லாம் சிலரை வர்ணிக்கிறார்கள். நான் அப்படியெல்லாம் சபாரத்தினம் ஆசிரியரை வர்ணிக்க விரும்பவில்லை. எனது 62 வயது அனுபவத்தில் நான் ஓர் உண்மையான மனிதனைச் சந்தித்தேன் என்றால் அது சபாரத்தினம் ஆசிரியர்தான். அதற்காக ஏனைய நண்பர்கள் 'எங்களைப்பார்த்தால் உனக்கு மனிதனாகத் தெரியவில்லையா?' என்று என்னுடன் கோபிக்க வேண்டாம்.

தன்னலமற்ற சேவைக்கு உதாரணமாக எமது கண்முன்னே வாழ்ந்து மறைந்த ஒருவர் என்றால் அது சபாரத்தினம் ஆசிரியர் தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கண்டு கொள்ளாமல் விட்ட ஆளுமைகளுள் சபாரத்தினம் ஆசிரியரும் ஒருவர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மருத்துவ நிபுணர்கள் என எல்லோரும் சபாரத்தினம் ஆசிரியரை பயன்படுத்தினார்களேயொழிய அவரிடம் இருந்த அறிவுப்பொக்கிஷத்தை உலகறியச்செய்ய முன்வரவில்லை என்பது எனது அபிப்பிராயம்.

ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் என மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராக சபாரத்தினம் ஆசிரியர் எமது கண்முன்னே வாழ்ந்து மறைந்துள்ளார். பேரறிஞர்கள் என்று உலகம் கொண்டாடுபவர்கள் ஏதாவது ஒரு துறையில் தான் புலமை பெற்றிருப்பார்கள். கீழைத்தேயமேலைத்தேய தத்துவங்கள் இரண்டையும் ஒப்பிட்டு விளக்கமளிக்கக்கூடிய ஒருவராக அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஒருவர் சபாரத்தினம் மாஸ்டர். 'தமிழ் இலக்கியப் பரப்பில் கைலாசபதியும் சிவத்தம்பியும் விமர்சனக்கலையை தமிழில் அறிமுகம் செய்தவர்கள். மார்க்சிய விமர்சனப்பாணியை தமிழில் அறிமுகம் செய்தவர்கள்' என்றெல்லாம் கூறுவார்கள். சபாரத்தினம் ஆசிரியரோ, நாவலர் பாணி கீழைத்தேய இலக்கிய விமர்சனங்கள் (கண்டனங்கள்), மேலைத்தேய இலக்கிய விமர்சனங்கள், நவீன இலக்கியம் அனைத்தையும் விரல் நுனியில் வைத்திருந்த ஒருவர்.


கல்வி வியாபாரமாகி விட்ட இன்றைய உலகில் தன்னிடமிருந்த அறிவுச்செல்வத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை சேவையாக நினைத்தவர் தான் சபாரத்தினம் ஆசிரியர். யாழ்ப்பாண நூலகத்தில் தானே பணம் கொடுத்து பல மாணவர்களை அங்கத்தவராக இணைத்தவர் சபாரத்தினம் மாஸ்டர்.

நான் யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றை தொகுத்த வேளையில் 30% வீதமான தகவல்களை தானே வலிய வந்து எனக்கு தந்துதவியவர் சபாரத்தினம் ஆசிரியர். இறுதிக் காலத்தில் இயலாமையுடன் படுத்திருந்த வேளையிலும் நான் தேடிச்சென்ற ஒரு தகவலை குறிப்பெடுத்து வைத்து அடுத்த முறை நான் சுகம் விசாரிக்கச்சென்ற போது தந்தார். 'எதற்காக உங்களுக்கு இந்த வேளையிலும் (படுக்கையிலிருந்த போதும்) இந்த வேலை?' நான் கடிந்து கொண்ட போது , 'நீங்கள் குறித்த தகவலைத் தேடித் தானே என்னிடம் வந்தீர்கள். என்னைத்தேடி வந்த உங்களது தேவையைப்பூர்த்தி செய்யவேண்டியது எனது கடமை' என சிரித்தவாறே கூறினார்.

ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய பல விளக்குகள்

கட்டுரைகள்


தொகுதி - 1



காவல்நகரோன் நாரந்தனையூர்
அறிஞர் ஆ.சபாரத்தினம்

பதிப்பாசிரியர் நா.நவராஜ்

சபாரத்தினம் ஆசிரியரின் ஆக்கங்களை "ஒரு விளக்கிலிருந்து ஏற்றிய பல விளக்குகள்" என்ற தலைப்பில் (ஏற்கனவே சபாரத்தினம் மாஸ்டர் எழுதிய ஒரு கட்டுரைக்கு இட்ட தலைப்பு) தொகுத்து, பதிப்பித்துள்ளார் நா.நவராஜ். மிக மிகப்பொருத்தமான ஒரு தலைப்பையே பதிப்பாசிரியர், இந்தக் கட்டுரைத் தொகுப்புக்கு வழங்கியுள்ளார். சபாரத்தினம் மாஸ்டர் ஏற்றிய விளக்குகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும்,யாழ். போதனா மருத்துவமனையின் உளநலப்பிரிவிலும் ஏன் உலகம் முழுவதும் சுடர் விடுகின்றன என்று சொல்லலாம். ஊர்காவற்றுறை பல அறிஞர்களை தமிழுலகுக்குத் தந்திருக்கிறது. அவர்களில் முதலிடத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர் சபாரத்தினம் மாஸ்டர்.



இந்நூல் எதிர்காலச் சந்ததிக்கு சபாரத்தினம் மாஸ்டரைப்பற்றி அறிந்து கொள்ள பெரிதும் உதவும்.

**தன்னலமற்ற சேவைக்கு உதாரணமாக எமது கண்முன்னே வாழ்ந்து மறைந்த ஒருவர் என்றால் அது சபாரத்தினம் ஆசிரியர் தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கண்டு கொள்ளாமல் விட்ட ஆளுமைகளுள் சபாரத்தினம் ஆசிரியரும் ஒருவர்.**

# 2024...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின், அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் இலக்கை வென்றெடுப்பதற்கான வழிவரைபடத்தைத் தயாரிக்க வேண்டும். எல்லாருமே சமஷ்டியைத்தான் கேட்கின்றார்கள். ஆனால் யாரிடமாவது சமஷ்டியை அல்லது அதைவிட உயர்வான ஒரு தீர்வைப் பெறுவதற்கான வழிவரைபடம் உண்டா? தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலப் பெயர் சமஷ்டிக் கட்சி என்பதுதான். ஆனால் செல்வநாயகம் காலத்தில் இருந்து இன்றுவரையிலும் 73 ஆண்டுகளாக சமஷ்டியைப் பெறமுடியவில்லை. கட்சியின் புதிய தலைமை அதற்குரிய வழிவரைபடத்தைத் தெளிவாக முன் வைக்குமா ?

அந்த வழிவரைபடத்தின் அடிப்படையில் தமிழரசியலை வழிநடத்தத் தேவையான தகைமை; கொள்ளளவு; தியாக சிந்தை;விசுவாசம் போன்றன தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எந்தத் தலைவரிடம் உண்டு?அப்படி ஒரு தலைவரிடம் எல்லாத் தகமைகளும் இல்லையென்றால், பல்வேறு வகைப்பட்ட ஆளுமைகள் இணைந்த இணைத்தலைமையை உருவாக்கலாம். அதுதான் இப்போதிருக்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரேவழி. இது தொடர்பாக அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் ஏற்கனவே தமிழரசுக் கட்சிக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உதாரணமாகக் காட்டியிருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் வேறு வேறு கட்சிகள் இணைந்தன. அதனால் அந்தக்கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி ஒரே கட்சி. அங்கே ஒருவர் மற்றவரை விட தன்னை மேலானவராகக் கருத முற்பட்டதன் விளைவாகத்தான் போட்டாபோட்டிகள் ஏற்பட்டன. எனவே ஒரே கட்சிக்குள் இணைத் தலைமைகளை ஏற்றுக் கொள்வது என்பது உயர்ந்த பட்ச ஜனநாயகம் ஆகும். 2009 க்குப்பின் தோன்றிய தமிழ்மக்கள் பேரவையும் இணைத் தலைமைகளைக் கொண்டிருந்தது என்பதனை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

**புதிய ஆண்டில், அரசாங்கம் வற்வரியை அதிகரிக்க உள்ளது. இருபது ஆண்டுகளில், ஆகப்பெரிய வரி அதிகரிப்பு இது. புதிய ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும்.**

இணைத்தலைமையை ஏற்றுக்கொள்வது என்பது,தன்னிடம் இல்லாத தகுதி வேறு யாரிடமோ இருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்வதுதான். சட்டப் புலமை,ஆங்கில அறிவு போன்ற தகுதிகள் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவை அல்ல. போராட்டப் பாரம்பரியமும் பலமான வாக்கு வங்கியும் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவையல்ல. 2009க்குப் பின்னரான தமிழ்த் தலைமைகளுக்கு அதைவிடக் கூடுதலாக, பண்புருமாற்றத்துக்குத் தேவையான தகமைகள் அதிகம் வேண்டும். பண்புருமாற்றம் என்பது கட்சித் தலைமையை கைப்பற்றுவதற்காக மற்றவர்களைச் சுதாகரித்து; தமிழ்த் தேசிய முகமூடி அணிந்து நடிப்புக்கு உறவு பாராட்டுவது அல்ல. ஆயுதப்போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசியலுக்குத் தேவையான; பிராந்திய மற்றும் பூகோள நிலைமைகளைப் பொருத்தமாகக் கையாளத் தேவையான;புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை உள்வாங்கி;புதிய மாற்றங்களுக்கு தயாரான; தலைமைகளே தமிழ்மக்களுக்குத் தேவை. தமிழரசுக் கட்சி அதற்குத் தயாரா?

2023 முடியும்போது காணாமல்போகச் செய்யப்பட்டவர்களுக்கான போராட்டம் 2500 ஆவது நாளைக் கடந்திருக்கிறது. மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் நூறாவது நாளைக் கடந்திருக்கிறது. சமஷ்டிக் கட்சி அதாவது தமிழரசுக் கட்சி சமஷ்டியை அடையத் தவறிய 73ஆவது ஆண்டு கடந்திருக்கிறது. புதிய ஆண்டு தமிழரசுக் கட்சியின் 74 ஆவது தோல்வியாண்டாக அமையுமா? அல்லது, கடந்த ஒரு நூற்றாண்டு காலத் தோல்வியில் இருந்து கற்றுக்கொண்ட ஆண்டாக அமையுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org